# இயல் 4

## இறையன்பு படைப்புகளின் வழிக் காணலாகும் சமுதாயச் சிக்கல்களும் தீர்வுகளும்

# 4. இறையன்பு படைப்புகளின் வழிக் காணலாகும் சமுதாயச் சிக்கல்களும் தீர்வுகளும்

1. முன்னுரை
2. வாழ்க்கையும் சிக்கலும்
3. அதிகாரி – எழுத்தாளர்
4. சிக்கலை அணுகும் விதம்

4.1. தனிமனிதச் சிக்கல்கள்

4.1.1. ஒப்பிட்டு வாழ்தல்

4.1.2. சிபாரிசு

4.1.3. இலட்சியம்

4.1.4. தன்னம்பிக்கை

4.1.5. பொறாமை

4.1.6. பொறுமை

4.1.7. சுயநலம்

4.1.8. துணிவு

4.1.9. கோபம் என்னும் கொடும் பகை

4.1.9.1. சினத்தினால் அடையும் தீமைகள்

4.1.9.2. கோபத்தை நீக்கும் வழிமுறைகள்

4.1.10. நேர மேலாண்மை

4.1.10.1. நேரம் கடிகாரத்தில் இல்லை

4.1.10.2. நாளை வருவதில்லை

4.1.11. வெற்றி தோல்வி

4.1.11.1. வெற்றி பெறும் வழிகள்

4.2. குடும்பச் சிக்கல்களும் தீர்வுகளும்

4.2.1. கணவன் - மனைவி

4.2.1.1. திருமணம்

4.2.1.2. இல்லறம்

4.2.2.வேலைக்குச் செல்லும் பெண்களின் சிக்கலும் தீர்வும்

4.2.2.1. புலவி

4.2.2.2. புரிதல்

4.2.3. நலிந்த உறவுகளால் வரும் சிக்கலும் தீர்வும்

4.2.4. பெற்றோர்-பிள்ளைகளுக்கிடையேயான சிக்கலும் தீர்வும்

4.2.4.1. பெற்றோரின் அணுகுமுறை

4.3. சமுதாயம் எதிர்கொள்ளும் சிக்கல்களும் தீர்வும்

4.3.1. பசிப்பிணி இல்லா சமுதாயம்

4.3.1.1. வறுமை எனும் நோய்

4.3.1.2. பொதுவுடைமை

4.3.2. கற்றல்-கற்பித்தலில் ஏற்படும் சிக்கல்களும்-தீர்வும்

4.3.2.1. பிள்ளைகளின் படிப்புச் சுமை – தீர்வு

4.3.2.2. அறிவின் திறவுகோல் கல்வி

4.3.2.3. கற்கும் முறை

4.3.2.4. ஆசிரியர்-மாணவர்-சிக்கலும் தீர்வும்

4.3.2.5. படிப்பு சுகமாக மாற –தீர்வு

4.3.3. சாதிச் சிக்கலும் தீர்வும்

4.3.4. சமயச் சிக்கலும் தீர்வும்

4.3.4.1. ஆத்திகம்-நாத்திகம்

4.3.4.2. போலி சாமியார்

4.3.4.3. மதம்-மார்க்கம்

4.3.5. அலுவலகச் சிக்கல் - தீர்வு

4.3.6. சுற்றுச்சூழல்

4.3.6.1. சுற்றுச்சூழல் சிதைவால் ஏற்படும் சிக்கல்

4.3.6.2. அணைக்கட்டுகளால் ஏற்படும் சிக்கல்கள்

4.3.6.3. இயற்கை வளங்களின்அழிவு- சிக்கலும் தீர்வும்

5.தொகுப்புரை

# இறையன்பு படைப்புகளின் வழிக் காணலாகும் சமுதாயச் சிக்கல்களும் தீர்வுகளும்

## 1.முன்னுரை

இயற்கை நமக்கு எல்லா வளங்களையும் குறைவின்றி வாரி வழங்கியிருக்கிறது. அமுதசுரபியே நம் கையில் கிடைத்தாலும் அதனைப் போற்றிப் பாதுகாக்க வேண்டிய நாமோ நம் கவனக்குறைவால், பொறுப்பின்மையால் அதனை அடுத்தவர் கையில் தந்துவிட்டு பிச்சைப் பாத்திரத்தை ஏந்தி நிற்கும் அவல நிலைக்கு உள்ளாகியுள்ளோம்.

**"இயற்கை பசியைத் தந்தது. பட்டினியை நாம் உருவாக்கினோம்.**
**பூமி இரும்பைத் தந்தது. கைவிலங்குகளை நாம் செய்து கொண்டோம்.**
**மண், பானைகளைத் தந்தது. திருவோடுகள் நமது தயாரிப்பு"[1]**

என்பதே உண்மை.

## 2. வாழ்க்கையும் சிக்கலும்

வாழ்க்கை என்பது தனித்திருப்பது அல்ல, சார்ந்திருப்பது. ஒருவரையே சார்ந்திருப்பது அல்ல. ஒருவருக்கு ஒருவர் சார்ந்திருப்பது. மக்கள் கூட்டமாகச் சேர்ந்து வாழ்வதே "சமூகம்" எனப்படும். தனிமனிதன் குடும்பமாக, குழுக்களாகச் சேர்ந்து வாழும் பொழுது சமுதாயம் உருவாகின்றது.

**"தனிமரம் தோப்பாகாது. மரங்கள் மொத்தமாக இருந்தால்தான்**
**அதனைத் தோப்பு என்பர். அதுபோலத் தனிமனிதர்கள் சேர்ந்து**
**கூட்டமாக வாழ்வதே சமுதாயம்"** [2]

என்று எம்.எஸ். உதயமூர்த்தி கூறுகின்றார்.

**"வாழ்க்கை ஒரு வரம்**
**வாழ்க்கை ஓர் அற்புதம்**
**வாழ்க்கை ஒரு திருவிழா**
**வாழ்க்கை ஒரு கொண்டாட்டம்"[3]**

வாழ்க்கை ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமாக தரப்படுகின்றது. வாழ்க்கையை வரமாய் எண்ணுபவர்கள் கொண்டாடுகிறார்கள். சாபமாக எண்ணுபவர்கள் திண்டாடுகிறார்கள். வாழ்க்கை என்பது வாழ்வதாக இல்லாமல் கழிப்பதாக இருக்கும்பொழுது சிக்கல்கள் தோன்றுகின்றன.அது இடத்திற்குஇடம்,ஊருக்கு ஊர், மனிதனுக்கு மனிதன் வேறுபடுகின்றது. சிக்கல் இல்லாத மனிதர்களே இல்லை.

**"வாழ்க்கை எப்பொழுதும் சுகமாகவே இருப்பதில்லை**
**போராட்டங்களும் பிரச்சனைகளும்தான் வாழ்க்கையைச்**

**சுகமாக மாற்றுகின்றன. அதைப் பந்தயமாக மாற்றி**
**சுவாரசியத்தை உருவாக்குகின்றன"[4]**

என்று இறையன்பு கூறுவதாக சுந்தர ஆவுடையப்பன் குறிப்பிடுகின்றார்.

நதி புறப்பட்ட இடத்திலிருந்து கடலில் சங்கமிக்கும் வரையிலான பயணத்தில் எத்தனையோ ஓசையை எழுப்புகின்றது. அதேபோல மனிதனும் தனது சூழ்நிலைக்குட்பட்ட பல சிக்கல்களைச் சந்திக்கிறான். மழைவரும்பொழுது மட்டுமே நினைவுக்கு வரும் குடையைப் போல, சமூகத்தில் அவலங்கள் அதிகமாகும் பொழுது அவற்றைத் தீர்க்கவல்ல மனிதர்களை இச்சமுதாயம் தேடுவது இயல்பான ஒன்று. காயம்பட்ட சமுதாயத்திற்கு மருந்து போடும் மருத்துவராகப் பலர் தோன்றினாலும் தன் எழுதுகோலால் சமூகம் நிமிர்ந்து நிற்க வழிசெய்யும் படைப்பாளருக்கே அங்கே தலைமையிடம் தரப்படும்.

## 3. அதிகாரி – எழுத்தாளர்

ஓர் இலக்கியப் படைப்பாளன் தான் வாழுகின்ற சமுதாயத்தில் நிகழும் பல்வேறு நிகழ்வுகளால் உந்தப்பட்டு, அதனை இலக்கியமாகப் படைக்கிறான். இதன் மூலம் மக்களுக்கு அவர்களோடு வாழும் சகமனிதர்களின் பலவிதமான உணர்வுகளையும் புரியவைக்க முயலுகின்றான். அத்தகு படைப்பாளருள் இறையன்பு குறிப்பிடத்தக்கவர். ஓர் அதிகாரி எழுத்தாளராகும் பொழுது மக்களிடையே மிகவும் நெருங்கி வரமுடிகின்றது.

**"எழுத்தாளராக மாறும் அதிகாரி தன் பேனாவை இரண்டு**
**நோக்கத்திற்காக பயன்படுத்திக் கொள்ள முடியும். எழுத்தாளராக**
**குறைகளைச் சுட்டிக்காட்டவும் அதிகாரியாக குறைகளைக் களையவும்**
**முற்படும் பொழுது மக்களோடு நெருக்கமாக அறியப்படுவர்.அத்தகு**
**எழுத்தாளர் அதிகாரிகளில் மிக முக்கியமானவர் இறையன்பு"[5]**

என்கிறார் முனைவர் மு. இராஜேந்திரன் இ.ஆ.ப.

சமூக அக்கறையோடும் தார்மீக ஆவேசத்தோடும் யாராவது ஒருவன் பேனா பிடித்தால் அவன் நிர்வாணிகளுக்கு இடையே ஆடை பூண்டவனாய் அலட்சியப்படுத்தப்படுகின்றான். இந்த எதிர்மறையான சூழலில், தன் சுதர்மம் குலையாமல் கம்பீரமாய் எதிர்நீச்சல் போடும் இறையன்புவின் எழுதுகோல் இளைஞர்களை ஆட்டிப் படைக்கும் மந்திரக்கோல்.

**"எழுத்து நம்பிக்கை தரும் என்பார்கள். நம்பிக்கையையே எழுத்தாக்கி**
**இளைஞர்களுக்குப் புதிய தடங்களைப் போட்டவர் இறையன்பு "[6]**

என்று மு. இராஜேந்திரன் இ.ஆ.ப. குறிப்பிடுகின்றார்.

## 4. சிக்கலை அணுகும் விதம்

மனிதனுக்குச் சிந்தனையும் உணர்வும் உள்ளதால் நாளைய மனிதனுக்கு இன்றைய மனிதன் வழிகாட்டியாக வாழவேண்டும் என்ற உயர்ந்த ஆதங்கத்தில், மனிதர்களின் பலவிதமான சிக்கல்களையும் பார்க்கும் இறையன்பு, எல்லா சிக்கல்களையும் ஒரே கண்ணோட்டத்தில் காணாமல் சிக்கல்களின் தீவிரம், ஆழம், அதனால் நேரும் விளைவுகளை நினைவிற் கொண்டு அதற்கான தீர்வுகளைக் காணவே விழைகின்றார்.

சிக்கல்களை ஒட்டு மொத்தமாகக் கையாளாமல் அதனைத் தனித்தனிக் கூறுகளாக்கி, ஒவ்வொரு கூறுகளையும் தனித்தனியே கையாளும்பொழுது சிக்கல்கள் ஒவ்வொன்றாக விடுபடும். சிக்கல்களை, தனிமனிதச் சிக்கல், குடும்பச் சிக்கல், சமுதாயச் சிக்கல் என்று மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரித்து, ஒவ்வொரு நிலையிலும் மக்கள் எதிர்கொள்ளும் சிக்கல்களையும் அதற்கு இறையன்பு தன் படைப்புகளின் வழியாகச் சொல்லும் தீர்வுகளையும் ஆராய்வதே இவ்வியலின் நோக்கமாகும்.

### 4.1. தனிமனிதச் சிக்கல்கள்

இன்றைய இளைஞர்கள், வருங்கால இந்தியாவின் தூண்கள். நாளை உலகை ஆளக்கூடிய அவர்களிடம் இருக்க வேண்டியவை திறமை, பொறுமை, உண்மை, நேர்மை. தனக்குரிய இலக்கினை நிர்ணயித்துக் கொண்டு, இலட்சங்கள் கோடிகளுக்காக வாழாமல் இலட்சியத்திற்காகவும் குறிக்கோளுக்காகவும் வாழ வேண்டிய இளைஞர்களிடம் திறமை, பொறுமைக்குப் பதிலாக சோம்பலும் பொறாமையும், உண்மை, நேர்மைக்குப் பதிலாக சுயநலமும் குடிகொண்டுள்ளன.

> **"இன்றைய இளைஞர்கள் 2, 3 ஆம் தலைமுறையைச் சார்ந்திருப்பதால் பாதுகாக்கப்பட்ட நாற்றுகளாக இருக்கிறார்கள். அவர்கள் வளர்ந்தபிறகும் அடுத்தவர்களின் அரவணைப்பை எதிர்பார்க்கிறார்கள்"**[7]

என்று இறையன்பு சுட்டிக்காட்டுகின்றார். இலக்குகளை நிர்ணயித்துக் கொண்டு இயங்க வேண்டிய இளைய சமுதாயம், போதையின் பிடியில் சிக்கித் தடம் புரள்கின்றது. தனக்குக் கிடைக்காத ஒன்றிற்காக ஏங்கி ஏங்கி மருகும் அவன் கடந்தகால விரக்தியிலும் எதிர்கால கனவிலும் காலத்தைக் கழிக்கிறான். நிகழ்காலத்தில் நிமிடத்தையும் தொலைக்கின்றான்.

## 4.1.1. ஒப்பிட்டு வாழ்தல்

இன்றைய இளைஞர்கள் தங்களை மற்றவர்களுடன் ஒப்பிட்டுக் கொண்டே இருக்கிறார்கள். இளைஞர்களின் இந்த ஒப்பீட்டு மனப்பான்மையைப் பற்றி இறையன்பு குறிப்பிடுகையில்,

> **"தன்னைவிட உயர்ந்தவர்களைக் கண்டால் தாழ்வு மனப்பான்மையும் தாழ்ந்தவர்களைக் கண்டால் உயர்வு மனப்பான்மையும் தரித்துக் கொள்கிறான்"[8]**

என்கிறார்.

> **"பூக்களாக இருப்பவன் நார் கிடைக்காததால் மாறிப் போகிறான்.**
> **நீராக இருப்பவன் பானை கிடைக்காததால் வழிந்து போகிறான்.**
> **கோட்டையாக இருப்பவன் பராமரிப்பு இல்லாததால்**
> **இடிபாடுகளுடன் சிதைந்து போகிறான்"[9]**

என்று இளைஞர்களைக் குறிப்பிடும் இறையன்பு தாழ்வு மனப்பான்மை நீங்குவதற்கான வழிமுறையையும் வழிமொழிகின்றார்.

தாழ்வு மனப்பான்மை இரண்டு வகைப்படும்.

1. தன்னை மற்றவர்கள் தாழ்வாக நினைக்கிறார்கள் எனத் தெரிந்து கொதித்து எழும் பாங்கு.
2. அடுத்தவர்கள் நினைப்பது உண்மைதான். நாம் தாழ்வானவர்கள்தான் என்று எண்ணுவது.

தாழ்வு மனப்பான்மை நீங்க,

> **"நாம் தனித்தன்மையானவர்கள் என்கிற உள்ளுணர்வுடன் நமக்குள் புதைந்து கிடக்கும் அற்புதப் புதையல்களைத் தேட ஆரம்பித்தால் நாம் தாழ்வு மனப்பான்மை கொள்ள வேண்டியதில்லை.**
> **உயர்வு மனப்பான்மையிலும் உழல வேண்டியதில்லை"[10]**

என்று இறையன்பு குறிப்பிடுகின்றார். நம்மை மற்றவருடன் ஒப்பிடும்பொழுது நம்மை அறியாமலேயே அவர்கள் நமக்கு விரோதிகளாகி விடுகின்றனர். நம்மை நம்மோடு ஒப்பிடுவது தான் உயர்ந்த ஒப்பீடு என்கிறார் இறையன்பு.

### 4.1.2. பரிந்துரை

வாழ்க்கையில் எப்பொழுதும் நிழலிலேயே இருப்பவர்கள் இளைஞர்கள். எதிர்ப்புகளைச் சந்திக்காமல், குடைக்கடியில் வளர்ந்திட்ட நாற்றாக உள்ள இவர்கள், இளமைப் பருவத்தைப் பெற்றோர் கையைப் பிடித்தபடியே அடைவதால், எப்பொழுதும் கருப்பையின் கதகதப்பை எதிர்பார்க்கிறார்கள். விரைவாகச் சம்பாதிக்க விழையும் அவர்கள் யாருடைய பரிந்துரையையாவது பிடித்து வாழ்வில் முன்னேறிவிடத் துடிக்கிறார்கள். தன்னை நம்பாதவனே அடுத்தவர்கள் தயவை நாடுவான்.

> **"திறமையின்மையும் நேர்மையின்மையும் எயிட்சைக் காட்டிலும்**
> **வேகமாகப் பரவக் கூடியது"**[11]

என்று குறிப்பிடும் இறையன்பு, தகுதியற்றவன் பரிந்துரையின் வாயிலாக அடையும் பணியால், தகுதியான நபரின் வாய்ப்பு தட்டிப் பறிக்கப்படுகின்றது என்று வருந்துகின்றார்.முன்னேறத் துடிக்கும் இளைஞர்களை முறைப்படுத்தி, வாழ்வில் உயர்ந்த நிலையை அடையும் வழிமுறைகளை இறையன்பு வகைப்படுத்துகின்றார்.

### 4.1.3. இலட்சியம்

ஒவ்வொரு மனிதனுக்கும் இலட்சியம் இன்றியமையாதது. குறிக்கோளை அடைய ஓயாது முயற்சி செய்தால் மட்டுமே பலன் கிட்டும். குறிக்கோளை அடைய முயலும்பொழுது பல தடைகள் வரலாம். அத்தடைகளைத் தகர்த்து முன்னேறும் பொழுதே இலட்சியத்தை அடைய முடியும் என்பதை சதுரங்க விளையாட்டின் மூலம் இறையன்பு விளக்குகின்றார். சதுரங்கத்தின் கடைசிக் கட்டம் வரை சிப்பாய் சென்றால், முடிவில் மிக உயர்ந்த ராணி, மந்திரி நிலையைப் பெறுவது போல, ஒருவன் வாழ்க்கையில் தொடர்ந்து முயற்சி செய்தால் உயர்ந்த குறிக்கோளை அடையலாம் என்று அறிவுறுத்துகின்றார்.

நம்முடைய முயற்சிகள் அனைத்தும் இலக்கை மையமிட்டதாக இருக்கும்பொழுதே அது இலட்சிய சமுதாயம் அமைவதற்கு அடித்தளமிடுவதாக அமையும்.

> **"இலட்சயவாதிகள்தான் உலகம் விடியும் ஒளியை ஓயாமல் உமிழ்வார்கள்.**
> **அவர்கள் இலக்கோ இலக்கில்லாமல் இருப்பதே"**[12]

என்று கூறுவதன் மூலம் இலட்சிய சமுதாயம் அமைவதற்குரிய மனித மேம்பாட்டுச் சிந்தனைகளை இறையன்பு பதிவு செய்கின்றார்.

### 4.1.4. தன்னம்பிக்கை

இலட்சியத்தை அடைய தன்னால் முடியும் என்று உறுதியாக நம்புகிற தன்னம்பிக்கை, தன்னுள் பொதிந்திருக்கும் பல்வேறு ஆற்றல்களை வெளிக்கொணர உதவும்.

**"தன்னம்பிக்கை என்னும் மெழுவர்த்தியை மட்டும்**
**கையில் ஏந்தினால் போதும்."[13]**

அனைத்துத் திறமைகளையும் ஒன்றன்பின் ஒன்றாக உணர்ந்து பயன்படுத்திப் பலன்பெற முடியும் என்கிறார் ஆசிரியர்.

**"நம்பிக்கையுள்ளவன் கண்களில்**
**இருள் கூட விளக்காகி**
**எதிர்காலத்தை**
**வெளிச்சமாக்குகிறது"[14]**

நம்பிக்கை உள்ளவர்கள் கப்பலின் உடைந்த பகுதிகளைக் கூட கெட்டியாகப் பிடித்துக் கொண்டு கரையேறுகிறார்கள் என்று கூறும் இறையன்பு,

**"தன்னம்பிக்கை இல்லாத மனிதன் முதுகெலும்பற்ற**
**மனிதனாகி விடுவான் "[15]**

என்று கூறுவதன் மூலம் தன்னம்பிக்கை கொள்வதன் அவசியத்தை வலியுறுத்துகின்றார். வளரும் சமுதாயம் தன் திறமையின் மீது நம்பிக்கை வைக்க வேண்டும்.

**"உணராத ஆற்றலும் ஊறாத நீரும் தாகத்தைத் தணிக்க முடியாது"[16]**

திறன்களில் ஏதாவது பற்றாக்குறை இருந்தால் அவற்றை வளர்த்துக் கொள்ள இன்னும் அதிகப்படியாக உழைக்க வேண்டும். தகுதியான நபர்களிடம் ஆலோசனை பெற வேண்டும். அனுபவம் பெற்றவர்களிடம் சென்று நம்முடைய முயற்சி சரியான திசையில் சென்று கொண்டிருக்கிறதா என்று பார்க்க வேண்டுமென இறையன்பு அறிவுறுத்துகின்றார்.

### 4.1.5. பொறாமை

எத்தனை முயன்றும் தன்னால் ஒன்றை அடைய முடியாத இயலாமை, பிறருக்குக் கிடைத்ததைக் கண்டு பொறாமையாக மாறுகிறது. பொறாமைத்தீ வெகுளியாய் மாறி பிறரை வசைபாடவும் செய்கின்றது.

“விஜிலென்ஸ்”என்ற கதையில், டி.எஸ்.பி. கஜேந்திரனின் மனைவிக்கு, தன் பிள்ளைகள்சரியாகப் படிக்காத ஏக்கம், பாரிஜாதத்தின் பிள்ளைகள் படிச்சு முன்னேறியதைக் கண்ட பொறாமையால் பாரிஜாதத்திடம்,

**“என் பையன் கூட இன்ஜினியரிங் படிக்கணும்னு ஆசைப்பட்டான் ஆனா உங்க வீட்டுக்காரர் படற அவஸ்தையைப் பார்த்துட்டு “இது மட்டமான பொழைப்பா இருக்கே” என்று நான் தான் வேண்டாமென்று சொல்லிவிட்டேன்”[17]**

என்று கேலி பேசுவதைச் சுட்டிக்காட்டுகிறார் ஆசிரியர். பொறாமை, பேராசை, கோபம், இன்னாச் சொல்லை நீக்கி வாழ்வதே அறம் என்பதை,

**“அழுக்காறு அவா வெகுளி இன்னாச்சொல் நான்கும்**
**இழுக்கா இயன்ற தறம்”[18]**

எனக் குறளும் பகர்கின்றது.

## 4.1.6.பொறுமை

பொறாமை எனும் பேய் நம்மை விட்டு நீங்க நம் திறமையை வளர்த்துக் கொள்ள வேண்டும். நம் திறமை முழுதும் வெளிப்பட அதற்குரிய காலம் வாய்க்கும் வரை பொறுமையைக் கடைபிடிக்க வேண்டும். எந்தக் காரியம் வெற்றி பெறவும் பொறுமை தேவை என்பதாலேயே வள்ளுவரும், “பொறுமை கடலினும் பெரிது” என்றார்.

எந்த வேலையையும் பொறுமையின்றி அவசரமாகச் செய்தால் வெற்றி பெற முடியாது என்பதை,

**“கூட்டுப் புழுவின் நிலை**
**உறக்கமுமில்லை**
**மயக்கமுமில்லை**
**அது மௌனம்**
**தவம்**
**வைராக்கியத்துடன் கூடிய தவம்**
**தனக்கும் சிறகுகள் முளைக்கும்**
**வான வீதியில் பறந்து செல்ல முடியும்**
**என்கிற உந்துதலுடன் கூடிய தவம்”[19]**

வண்ணத்துப் பூச்சியின் வாழ்க்கை உணர்த்துகின்றது. கூட்டுப் புழுவானது இலைகளை உண்டு வாழ்ந்து தன்னையே ஒடுக்கிக் கொண்டு பொறுமையாகக் காத்திருப்பதால் தான் வண்ணத்துப் பூச்சியாக மாறமுடிகின்றது. அதுபோல நாமும் பொறுமையாக இருந்தால் சாதனையாளராக மாறலாம்.

### 4.1.7. சுயநலம்

இளைய சமுதாயத்திடம் காணும் அடுத்த சிக்கல்,குறுகிய மனதுடன் சுயநலமாய் வாழ்வது தான். சுயநலத்துடன் வாழ பயமே அடிப்படைக் காரணம் ஆகும். நாளை நமக்கு அது கிடைக்காமல் போனால் என்ன செய்வது? நமக்குரியதை பிறர் அடைந்துவிட்டால், எப்படி அவர்களிடமிருந்து மீட்டெடுப்பது? என்ற பயமே சுயநலமாகச் சிந்திக்கத் தூண்டுகின்றது. "காக்கை குருவி எங்கள் சாதி" என்று வேற்றுமை கலைந்த, சுயநலம் தொலைந்த ஒற்றுமையைப் பறைசாற்றினார் பாரதி. ஆனால் இன்றைய இளைய சமுதாயமோ, சுயநலம் என்னும் பேய் பிடித்து, தனது முன்னேற்றத்திற்காகப் பிறரை வஞ்சிக்கவும் தயாராகி விட்டது. இந்நிலை மாறுவதற்கான தீர்வை இறையன்பு துல்லியமாகச் சுட்டிக்காட்டுகின்றார்.

### 4.1.8. துணிவு

மகிழ்ச்சியின் முதல் எதிரி பயம். தேவையற்ற பயங்களால் மகிழ்ச்சி பறந்தோடி விடும். தயக்கமும் தளர்ச்சியும் நம்மை தள்ளாட வைத்து விடும். அச்சம் எங்கு தேவை என்பதை,

**"அஞ்சுவது அஞ்சாமை பேதைமை அஞ்சுவது**
**அஞ்சல் அறிவார் தொழில்"**[20]

என்று வள்ளுவரும், அச்சத்தை அகற்றும்படி பாரதியும்,

**"அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே**
**உச்சி மீது வானிடிந்து வீழுகின்ற போதிலும்"**[21]

கூறியுள்ளனர். ஒரு செயலைத் தொடங்கும் முன் நம் மனதை ஒருவித அச்சம் பற்றிக் கொள்கின்றது. இதற்குக் காரணம் அச்செயலைப் பற்றிய தெளிவின்மையும் குழப்பமுமே ஆகும்.

**"நம் மனம் தெளிவாக இருந்தால் நாம் பயப்படுவதற்குக் காரணங்கள் இல்லை. நாம் குழப்பமாய் இருந்தால் நம்மைச் சுற்றியுள்ள அனைத்திலும் நமக்கு நடுக்கம் ஏற்படுகிறது"**[22]

என்று இறையன்பு அறிவுறுத்துகின்றார். தெளிவும் துணிவும் முயற்சியும் இருந்தால் மட்டுமே ஒருவன் எக்காரியத்திலும் வெற்றி பெற முடியும் என்பதை,

**"முயற்சி திருவினையாக்கும் முயற்சியின்மை**
**இன்மை புகுத்தி விடும்"**[23]

எனும் குறள்வழி நின்று இறையன்பும்

**"முயற்சி செய்தால் எதுவும் முடியும்**
**அயற்சி அடைந்தால் அனைத்தும் மடியும்"**[24]

என்று எச்சரிக்கின்றார்.

## 4.1.9. கோபம் என்னும் கொடும் பகை

இன்றைய இளைஞர்கள் திறமைசாலிகள். ஆனால் போராடும் குணமற்றவர்களாக, எளிதில் கோபம் கொள்ளக் கூடியவர்களாக இருக்கிறார்கள். மனப்பக்குவம் சிதைகின்ற பொழுது மனிதன் பொறுமையை இழக்கின்றான். எதற்கெடுத்தாலும் எரிச்சல் படுகின்றான். தன் எதிர்ப்பைத் தெரிவிக்கச் சினமே சிறந்த வழியென்று எண்ணுகின்றான். சினம் அடையும் பொழுது பல இன்னல்களை அவன் அடைவதோடு அவனைச் சார்ந்தவர்களும் இன்னல் அடைகின்றனர். சினம், சேர்ந்தவரையும் கொல்லக் கூடியது என்று கூறும் வள்ளுவர் நல்லவர்களின் கோபம் கண நேரத்தில் தோன்றி மறையக் கூடியது என்பதை,

**“குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி**

**கணமேயும் காத்தல் அரிது”**[25]

என்று வலியுறுத்துகின்றார். கோபம் ஒரு கொடிய விஷம். விஷம் கூட அடுத்தவர்களை மட்டுமே கொல்லும். ஆனால் கோபம் கொண்டவர்களையும் அவர்களைச் சார்ந்தவர்களையும் கொல்லும் கொடிய சாதனம். கோபம் விதைக்கப் பயன்படாது. புதைப்பதற்கே வழி வகுக்கும்.

கோபம் ஒரு மனிதனின் குணத்தையே மாற்றிவிடும். குணத்தில் உயர்ந்தவன் சினத்தை வெளிப்படுத்தினால் தன் நிலையிலிருந்து தாழ்ந்து போகிறான். தன்னை விட எளியவரிடத்தில் தன் கோபத்தை வெளிப்படுத்தினால், தன்னை விட வலியவரிடத்தில் அடிமை நிலைக்குத் தள்ளப்படுகின்றான் என்பதை,

**“யார் தங்களின் கீழ் பணிபுரிபவர்களிடம் அதிக கோபத்தைக்**

**காட்டுகிறார்களோ அவர்கள் தனக்கு மேலே உள்ளவர்களிடம்**

**அதிகமாக குழைபவர்கள்”** [26]

என்று இறையன்பு சுட்டிக்காட்டுகின்றார்.

## 4.1.9.1. சினத்தினால் அடையும் தீமைகள்

கோபம், கொள்பவனை மட்டுமின்றி அவன் இனத்தையே அழித்துவிடும் என்பதை,

**“சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்**

**ஏமப் புணையைச் சுடும்”** [27]

என்று வள்ளுவர் சுட்டிக் காட்டுகின்றார்.

- ❖ தேவையில்லாமல் நாம் பிறர் மீது சினம் கொள்ளும்பொழுது நமக்குப் பகை அதிகரிக்கிறது.

- ❖ கோபத்தினாலும் அச்சுறுத்தலினாலும் விளைகின்ற முன்னேற்றம் நீர்க்குமிழி போல நொடி நேரத்தில் மறைந்துவிடும்.
- ❖ கோபம் உண்மையானவர்களை நம்மிடம் இருந்து ஒதுக்கி வைத்து விடும்.
- ❖ கோபப்படும்பொழுது நம் ஆற்றல் விரயமாகும். ஊக்கம் வீணாகும். நம் ஆயுளில் ஒரு பகுதி குறைந்து போகும்.
- ❖ உடல் நலம் கெடுவதோடு நிம்மதி குலையும். நம் நிம்மதி குலைவதோடு குடும்ப நிம்மதியும் கெட்டுவிடும். இதனை இறையன்பு,

**"கோபத்தால் கனியாக இருப்பவர்கள் கல்லாகி விடுகிறார்கள்.**
**பீனிக்ஸ் பறவையாக இருப்பவர்கள் வல்லூறாகி விடுகிறார்கள்"** [28]

என்கிறார்.

சினமடைபவர்களுக்கு மனித மதிப்பும் உழைப்பின் மதிப்பும் தெரிவதில்லை. உயிரற்ற பொருட்களைச் சிதைப்பதன் மூலம் தனது சினத்தை வெளிப்படுத்துபவர்கள்,

**"ஒரு கோப்பையை உடைக்கின்ற பொழுது ஓர் உழைப்பாளியின் உழைப்பை அசிங்கப்படுத்துகிறோமே என்றோ, மரத்தை அழிக்கின்ற பொழுது இறைமையைக் கொச்சப்படுத்துகிறோமே என்றோ நினைப்பதில்லை"** [29]

என்று இறையன்பு வருந்துகின்றார்.

## 4.1.9.2.கோபத்தை நீக்கும் வழிமுறைகள்

மனிதனின் முதல் எதிரியான கோபத்தை நீக்க பல வழிமுறைகளை இறையன்பு எடுத்தியம்புகின்றார். கோபத்தை அடக்கி வைக்க வைக்கத் தான் அது அதிகமாகின்றது.

**"ஒருவர் மீது கோபம் வரும் போது அவர்கள் செய்த நல்ல காரியங்களை நினைத்துப் பார்த்தால் கோபம் உடனே ஆவியாகும். அன்பு ஊற்றெடுக்கும். கோபத்தை மெருகேற்றி அன்பாக்குவதே உண்மையான மெய்ஞானம். "** [30]

அதற்கு கோபத்தை விழிப்புணர்வுடன் அணுக வேண்டும் என்கிறார் இறையன்பு.

கோபம் என்பது நமது இயலாமையின் வெளிப்பாடு. எதுவும் செய்ய முடியாதபொழுது கோபப்படுகிறோம். ஒருவரின் கோபம் அவர்களின் உண்மையான உருவத்தை வெளிப்படுத்திவிடும் என்பதை,

**"கோபம் வரும் போது அவர்கள் முகத்தைக் கண்ணாடியில் பார்த்தாலே போதும். கோபம் எவ்வளவு கொடூரமானது என்பதை**

**உணர முடியும். கோபத்திலிருந்து விடுபட இதுவே சிறந்த வழி "[31]**

என்கிறார் இறையன்பு. மேலும் கோபம் குறையும் பொழுது பார்வை விசாலமாகும். தேடல் அதிகரிக்கும். உணர்வு ஆர்ப்பரிக்கும். அனைத்திலும் நம்பிக்கைத் தோன்றும். அதனை அனுபவிக்கும் பொழுது உலகமே அழகாகத் தோன்றும் என்கிறார்.

## 4.1.10.நேர மேலாண்மை

இன்றைய இளைஞர்களுக்கு நேரத்தின் அருமை தெரிவதில்லை. "காலம் கண் போன்றது கடமை பொன் போன்றது" என்பதை உணர்ந்து, தான் எண்ணிய செயல் முடிவதற்கான, காலத்துக்காகக் கொக்கைப் போல காத்திருக்க வேண்டும் என்பதை வள்ளுவரும்,

**"கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்**

**குத்தொக்க சீர்த்த இடத்து"[32]**

என்று சுட்டிக்காட்டியுள்ளார். காலத்திற்காக காத்திருந்து, தகுந்த காலம் வாய்க்கும் பொழுது அதனைப் பயன்படுத்திக் கொள்பவருக்கு உலகமே வசப்படும். நேரத்தை இனிதாகப் பயன்படுத்த நேர மேலாண்மை அவசியம். எந்த நேரத்தில் எதைச் செய்ய வேண்டும். எவ்வளவு நேரத்தில் அதைச் செய்து முடிக்க வேண்டும் என்கிற கணக்கு தான் நேர மேலாண்மை. செய்கிற பணியிலேயே முழுமையாகத் திளைத்திருப்பவர்கள் மூன்று நிமிடங்களில் முடிய வேண்டியதை முக்கால் நிமிடத்தில் முடித்துவிடுவர். நேரத்தைச் சரியாகப் பயன்படுத்த எந்த செயலில் ஈடுபடுகின்றோமோ அதில் முழுமையாக ஈடுபடுகின்ற மனப்பான்மை வேண்டும். அதுவே நேர மேலாண்மைக்கு இலக்கணம்.

### 4.1.10.1. நேரம் கடிகாரத்தில் இல்லை

ஒரு வேலையை அரைகுறையாகச் செய்துவிட்டு அடுத்த வேலைக்குத் தாவிச் செல்வது பயன் விளைவிக்காது.

**"வேலையைத் திட்டமிட்ட நேரத்தில் தொடங்க வேண்டும் என்பதற்காகச் செய்கிற பணியினைச் செவ்வனே செய்யாமல் பாதியிலே கைவிடுவது பாதி கிணறு தாண்டுவதைப் போன்றது"[33]**

என்கிறார் ஆசிரியர். இறையன்பு, நேரத்தைச் சேமிக்க செய்ய வேண்டியவைகளை வரிசைப்படுத்துகின்றார்.

- ❖ எங்கே அவசரம் அதிகரிக்கிறதோ அங்கே தாமதமும் அதிகம் காணப்படும்.
- ❖ யார் அதிகம் உழைக்கிறார்களோ அவர்களுக்கே நேரம் அதிகம் இருக்கின்றது.

- ❖ நேரத்தைக் கையாளும் விதமே நம் வாழ்வின் இலக்கைத் தீர்மானிப்பதாக இருக்கின்றது.
- ❖ தூக்கத்தைக் குறைத்து, கேளிக்கைகளைப் புறக்கணித்து நேரத்தைச்சேமிக்கலாம்.
- ❖ சோம்பல் கொடிய வியாதி. சுகப்பட ஆரம்பித்தால் வியர்வை சிந்த மனம் வராது.
- ❖ இரண்டு வேலைகளை ஒரே நேரத்தில் செய்வது அரைகுறையாகவே முடியும்.
- ❖ நாம் விழிப்புணர்வுடன் உள்ளார்ந்து செய்யும் எப்பணியும் நமக்கு அயற்சியை அளிக்காது, தளர்ச்சியும் தராது என்று நேர மேலாண்மை குறித்த தனது கருத்துகளை ஆசிரியர் பதிவு செய்துள்ளார்.

## 4.1.10.2. நாளை வருவதில்லை

நேற்று என்பது நினைவு. நாளை என்பது கனவு. இன்று மட்டுமே நம் வசமாக இருக்கின்றது. இதனை உணர்ந்து ஒவ்வொருவரும் அன்றைய பணியை அன்றே செய்துவிட வேண்டும். நாளை என்பது வராமலும் போகலாம். இந்த நிமிடமே உண்மையானது. நாளை செய்யப் போகிறேன் என்பவர்கள் ஒருபொழுதும் செய்யப் போவதில்லை என்று கூறும் இறையன்பு,

**"எதையும் தள்ளிப்போடுவது எல்லா**

**நோய்களிலும் மிகக் கொடியது"**[34]

என்று திட்டவட்டமாகக் கூறுகின்றார்.

## 4.1.11. வெற்றி தோல்வி

இன்றுள்ள இளைஞர்கள் திறமைசாலிகள். ஆனால் போராடும் குணமற்றவர்களாக, எளிதில் பொறுமையை இழப்பவர்களாக, தோல்வியைக் கண்டு மனம் உடைபவர்களாக, இருக்கிறார்கள். நினைத்த ஒன்று எதிர்பார்த்தவாறு நிறைவேறாதபொழுது சோர்வடைந்து விடுகிறார்கள். சோர்வு இறந்த காலத்தைக் கசப்பாக்கி, நிகழ்காலத்தைக் கண்ணீரால் ஈரப்படுத்தி, எதிர்காலச் செயல்பாடுகளை முடங்க வைக்கும் தன்மை கொண்டது. வெற்றியைக் காட்சிப்படுத்தியே நாம் முயற்சிகளை முன் வைக்கிறோம். பல நேரங்களில் முயற்சிக்கின்ற பொழுதே வெற்றி பெற்று விட்டதாகக் கருதுகிறோம். நமது முயற்சிகளில் தோல்வி ஏற்பட்டால் துவண்டு விடுகிறோம். புதிய முயற்சிகளை மேற்கொள்ளத் தயங்குகிறோம். வெற்றியும் தோல்வியும் நாணயத்தின் இரண்டு பக்கங்கள் என்பதை நாம் உணர வேண்டும். வெற்றி தரக் கூடிய களிப்பை விட, தோல்வி தருகின்ற அனுபவம் ஆழமானது என்பதே உண்மை.

தோல்விகளைச் சந்திக்கும்பொழுது நாம் ஒரு வகையான புதிய சிந்தனைகளைப் பெற்று, உலைக் கூடத்தில் அடிமேல் அடிவாங்கிப் பதப்படும்

இரும்புத் துண்டு போல, புதுவகை ஆக்கத்திற்கான பூபாளமாகக் கருதி, மனோதிடம் பெற வேண்டும்.

#### 4.1.11.1. வெற்றி பெறும் வழிகள்

வெற்றிக்கு நம்மையும் தோல்விக்குப் பிறரையும் சொந்தமாக்கும் தன்மையை விடுத்து காரண காரியங்களை அலச வேண்டும். சரியான நேரத்தில் செய்யாமை, மதிப்பீடு தவறிப் போதல், முயற்சியின்மை, ஏராளமான எதிர்பார்ப்பு போன்றவையே தோல்விக்கான காரணங்களாகும்.

**“வெற்றிக்கான சூத்திரங்கள் என்று எதுவுமில்லை. நாமாகவே நமக்காக அதை வடிவமைத்துக் கொள்ள வேண்டும். அவை நம் உள்ளாடைகள் போல நமக்கு மட்டுமே பயன்படும்”** [35]

என்கிறார் இறையன்பு.

தோல்வியை அடுத்தவர் முதுகில் ஏற்றிவிட எண்ணுபவர்கள், தங்கள் தோள்களில் அடுத்தவர்களின் தோல்விகள் தொங்குவதைக் கவனிக்க மறந்து விடுகிறார்கள். வெற்றி, தோல்விக்கு சூழ்நிலையும் ஒரு காரணமாக அமைகிறது. வாழ்க்கையில் ஒருவன் வெற்றி பெறுவது என்பது அவனது எண்ணங்களாலும் செயல்களாலுமே தீர்மானிக்கப்படுகின்றது. அதற்குத் திறமையை வளர்த்துக் கொள்வதுடன், நல்ல நட்பையும் உறுதுணையாக நிற்கும் மனிதர்களையும் பெருக்கிக் கொள்ள வேண்டும்.

தோல்வியை இதயத்திலும், வெற்றியைத் தலையிலும் வைத்துக் கொள்ளக் கூடாதென்பர். அது மனித வீழ்ச்சிக்குக் காரணமாகி விடும். வெற்றி அடைவது எளிதானதல்ல. அதற்கு நம் உழைப்பைச் சரியான திசையில் சரியான பலத்துடன் இலக்கை நோக்கித் தீவிரத்துடன் செலுத்தும் பொழுதுதான் வெற்றி பெற முடியும்.

ஒவ்வொரு நாளும் விழிப்புணர்வோடு செயல்படும் பொழுதுதான் இலக்கை அடைய முடியும்.

**“உயர்ந்த இலக்கை அடைவது என்பது ஒரேடியாக நிகழ்வதல்ல. ஒவ்வொரு அடியையும் உற்று நோக்குவதில் அடங்கியிருக்கிறது. இந்த நொடியைச் சரியாகப் பயன்படுத்தாமல் அடுத்த நொடியைப் பயன்படுத்த முயலக் கூடாது”** [36]

என்பது ஆசிரியரின் கருத்து. நாளைக்கு என்ன செய்வது என்று திட்டமிடுவதோடு மட்டுமின்றி இன்று இந்த நொடியை எவ்வாறு செலவழிக்கிறோம் என்பதில் விழிப்புணர்வு தேவை. அவ்விதம் சரியான திட்டமிடுதலுடன் கூடிய விழிப்புணர்வே உயர்ந்த இலக்கை அடைய வழி வகுக்கும் என்கிறார் இறையன்பு.

உயர்ந்த இலக்கை நிர்ணயித்துக் கொண்டு விழிப்புணர்வுடன் அதனை அடைய உறுதியாகப் போராடும் பொழுது வெற்றி உறுதி.

**"மனதில் உறுதி வேண்டும்"** [37]

என்கிறார் பாரதி. உள்ளத்தில் உறுதி நீடித்து விட்டால் செயலில் துணிவு இருக்கும். உறுதியான ஆற்றல் எல்லா நேரங்களிலும் உறுதுணையாகவும் பாதுகாப்பாகவும் நம்மை வழி நடத்தும். உறுதி, நம்பிக்கையை உருவாக்குகின்றது. உறுதியற்றவன் ஒரு நாளும் வாழ்வில், வெற்றி பெறுவதில்லை. இலக்கை அடையப் போராடும் குணம், தொலைதூர வெற்றியையும் அருகே கொண்டு வந்து விடும். இதனை,

**"தனக்குள் வைராக்கியம் தீயாக**
**கனியும் போது தான்**
**உலகத்தின் அசுத்தத்தையெல்லாம்**
**நீக்க**
**நம் கண்கள் கைகளாக நீள்கின்றன"** [38]

என்று இறையன்பு கூறுவதன் மூலம் மனிதனுக்குள்ளே நெருப்பு எரியும்பொழுது தான் உலகத்தின் அசுத்தங்களை எல்லாம் போக்கி நல்ல சமுதாயத்தை உருவாக்க முடியும் என்பது புலனாகின்றது. வாழ்வில் வெற்றி தோல்வி இயல்பானதே. எனினும், பெறுகின்ற வெற்றிக்கு ஈடுஇணை கிடையாது. வெற்றி தோல்வி பற்றி இறையன்பு குறிப்பிடுகையில்,

**"வெற்றி ஒன்றே முக்கியமில்லை. கவுரவமாகப் பெறுகின்ற தோல்வி**
**கேவலமாக அடைகின்ற வெற்றியைக் காட்டிலும் மேன்மையானது**
**நேர்மையாகப் பெறுகின்ற தோல்வி அயோக்கியத்தனத்தால் சாதிக்கின்ற**
**வெற்றியைக் காட்டிலும் வலிமையானது"** [39]

என்கிறார். உழைப்பு, அயராத உழைப்பு, பொறுமையாகக் காத்திருத்தல், முறையாகத் திட்டமிடுதல், விடாமுயற்சி இவையே வெற்றியை உண்டாக்கும். தோல்விக்கான காரணத்தைக் கண்டுபிடித்தலே வெற்றிக்கான திறவுகோல். நாம் நமது பலவீனங்களைத் துல்லியமாக உணரும்பொழுதே, அவை பலமாக மாறத் தொடங்குகின்றன என்கிறார் ஆசிரியர்.

## 4.2. குடும்பச் சிக்கல்களும் தீர்வுகளும்

"நல்லதொரு குடும்பம் பல்கலைக் கழகம்" என்பார் பாவேந்தர் பாரதிதாசன். அத்தகைய குடும்பங்களைக் காண்பது தற்பொழுது அரிதாகி விட்டது. நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக சிறிதும் பெரிதுமாய் சிக்கல்கள் தோன்றி குடும்பத்தின் நிம்மதியைக் குலைக்கின்றன. பொதுவாக குடும்பத்திற்குள் வரும் சிக்கல்களை,

கணவன் - மனைவி சிக்கல்,

உறவுகளுக்கிடையேயான சிக்கல்,

பெற்றோர் - குழந்தைகளுக்கிடையேயான சிக்கல்

என்று மூன்று விதமாகப் பிரிக்கலாம்.

### 4.2.1. கணவன் - மனைவி

இன்று குடும்பம் என்பது தீவாகிவிட்டது. ஒவ்வொரு மனிதனுமே தீபகற்பமாகி விட்டான். தன் வீட்டுச் சிக்கலை அயலாரிடம் கொட்டுவதாலும், அயலார் வீட்டுச் சிக்கலைத் தன் வீட்டிற்கே கொண்டு வருவதாலும் வீடே நரகமாகி விடுகின்றது. இன்றைய குடும்பங்களைப் பற்றி இறையன்பு குறிப்பிடுகையில்,

**"குடும்பம் என்பது வாழ்வதாக இல்லாமல் தங்குவதாக மாறி,**
**வீடுகளே விடுதிகளாக உள்ளன"**[40]

என்று வேதனைப்படுகின்றார்.

### 4.2.1.1. திருமணம்

திருமணம் என்பது வாழ்க்கையில் வரும் வசந்த நிகழ்வு. இன்றோ அது ஒரு சடங்காக மாறிவிட்டது. ஆணாதிக்கச் சமுதாயத்தில் திருமணம் என்ற சடங்கால் தொலைந்து போகும் பெண்ணின் அவலத்தை,

**" என் பெயரே மறந்து போனேன்**
**என் மணவிழாவில்**
**நான் தொலைந்து போனேன்**
**ஆனாலும் யாருமே என்னைத்**
**தேடவேயில்லை."**[41]

என்ற தாமரையின் கவிதை வரிகள் படம் பிடித்துக் காட்டுகின்றன. இதே கருத்தை வேறு விதமாக ஆசிரியர் பதிவு செய்கிறார். வாழ்க்கைத் துணையாக வரும் கணவனே தனக்குச் சுமையாகவும் அமைந்து விடுவதால் அவனையும் சேர்த்து சுமக்கின்றாள் மனைவி என்கிறார் இறையன்பு.

### 4.2.1.2. இல்லறம்

இல்லறம் நல்லறமாக அமையவே திருமணம் என்ற பந்தத்தை முன்னோர்கள் ஏற்படுத்தினர். ஆண்-பெண் என்ற இரண்டு உருளைகளால் நடக்கும் இன்ப வாழ்க்கை தான் இல்லறம்.இல்லறம் நல்லறமாக அமைய இல்லறத் தம்பதியர் அன்புடன் ஒருவரையொருவர் புரிந்து கொண்டும் விட்டுக் கொடுத்தும் வாழ்தல் அவசியம்.

## 4.2.2. வேலைக்குச் செல்லும் பெண்களின் சிக்கலும் தீர்வும்

இன்றைய சூழலில் கணவன் மனைவி இருவரும் வேலைக்குச் செல்வதென்பது இன்றியமையாத ஒன்றாகிவிட்டது. பெரும்பாலும் பெண்கள் திருமணத்திற்குப் பின் குடும்பம் என்னும் சூழலில் நுழைந்ததும் தொட்டிச் செடிகளாய், தங்களின் வேர்களைச் சுருக்கிக் கொள்கிறார்கள். படிப்பதையும் பணிக்குச் செல்வதையும் நிறுத்தி விடுகிறார்கள். பணிக்குச் செல்லும் பெண்களுக்கும் அது சுகமாக இல்லாமல் சுமையாகவே இருக்கின்றது.

**“வேலைக்குப் போவது**
**சலுகையாக இருக்குமென**
**சந்தோஷம் அடைந்தீர்கள்**
**ஆனால் சுமையாக மாறி**
**தொல்லைப் படுத்துகிறது**
**வீட்டு வேலைகளோடு**
**இன்னொரு பளு**
**இணைந்து கொண்டது”** [42]

என்ற வரிகள் வேலைக்குப் போகும் இன்றைய பெண்களின் அவல நிலையைப் படம் பிடித்துக் காட்டுகின்றது.

பல வீடுகளில் இன்றும் பெண்கள் அனுபவிக்கும் வேலைப் பளு மற்றும் மனஉளைச்சலுக்குத் தீர்வு சொல்லும் விதமாக,

**“இல்லத்து வேலைகளை**
**இருவருமாய்ப்**
**பகிர்ந்து கொண்டால்**
**அலுவலகம் செல்ல**
**ஆசையாயிருக்கும்”** [43]

என்ற தன் கருத்தை இவ்வரிகளில் பதிவு செய்கிறார் ஆசிரியர்.இல்லத்தில் அன்பு பெருகி பெண்ணுக்குச் சமஉரிமையும் கிடைத்தால், சாதம் சமைக்கும் கைகள் சரித்திரமும் படைக்கும் என்பதையும் தெளிவுபடுத்துகின்றார்.

### 4.2.2.1. புலவி

கணவன் மனைவியிடையே சிறு சிறு பிணக்குகள் வரலாம். ஆனால் அது மின்னலைப் போலத் தோன்றியவுடன் மறைந்து விட வேண்டும். இல்லையெனில் இடியாய் தலையில் இறங்கிவிட வாய்ப்புண்டு. இதனையே வள்ளுவரும்,

**“உப்பமைந் தற்றால் புலவி அது சிறிது**
**மிக்கற்றால் நீள விடல்”**[44]

என்கிறார். இதற்கு இறையன்பு விளக்கங்கூறுங்கால், "உப்பானது எந்த உணவில் கலந்தாலும் அந்த உணவோடு உணவாகிக் கரைந்து போகும் இயல்புடையது." இல்லற வாழ்வில் கணவன் மனைவி இருவருக்கிடையே நடக்கும் ஊடல் என்பது கூட உப்புப் போல இருவருக்குள் மட்டுமே கரைந்திருக்க வேண்டும். வெளிப்பட்டு நின்று அயலாருக்குத் தெரியும்படி ஆகிவிடக் கூடாது என்கிறார்.

உரிமைகளைக் கொண்டாடுவதே குடும்பங்களுக்குள் சிக்கல் உருவாகக் காரணம்.

**"நான் சரி. நீ சரியில்லை என்ற மனப்பான்மை உறவுகளில்**
**ஓட்டைப் போட்டுவிடச் செய்யும்"[45]**

கணவன் மனைவி உறவு என்பது ஒருவர் மீது மற்றொருவர் ஆதிக்கம் செலுத்த ஆசைப்படும் உறவாக உள்ளது. அதனாலேயே பல தம்பதிகள் வெகு விரைவில் சலித்துப் போகிறார்கள். வாழ்க்கையில் எத்தனையோ உறவுகள் வந்து போனாலும் இறுதி வரைத் தொடரக் கூடிய உறவு இல்லான்-இல்லாள் உறவே என்பதை,

**"ஆரம்பத்திலிருந்தே**
**தலைமுடி**
**உடனிருந்தாலும்**
**இறுதிவரை இருப்பது**
**பாதியில் முளைத்த**
**தாடை முடிதான்"[46]**

என்று இல்லற உறவுநிலையைச் சுட்டுகின்றார் ஆசிரியர்.

### 4.2.2.2. புரிதல்

புரிதல் இல்லாமையே கணவன்-மனைவி சிக்கலுக்கு அடிப்படைக் காரணம். கணவன் மனைவி இடையே புரிதல் இருக்க வேண்டும் என்பதை "அவ்வுலகம்" நாவலின் திரிவிக்ரமன்-சாயா-கங்கா பாத்திரங்கள் தெளிவு படுத்துகின்றன.

நல்ல மனிதனாக தம்மை நம்புகின்ற திரிவிக்ரமன், தன்னை நேசிக்கும் இளம் பெண் சாயாவைப் புரிந்து கொள்ளும் பக்குவமற்ற நிலையினால் சிக்கலுக்கு ஆளாகின்றார். சாயாவின் குடும்ப வாழ்க்கையும் சிதிலமடைகின்றது. பெற்றோரின் வற்புறுத்தல் காரணமாக, கங்காவை மணந்து கொண்ட விக்ரமன் அவளைப் புறக்கணிக்கின்றார். பிறகு, காலப் போக்கில் அவளை ஏற்றுக் கொள்கின்றார். மகன் சத்யகாமின் துர்மரணத்திற்குப் பின்னர் கங்காவை தீவிரமாக வெறுத்து ஒதுக்கும் திரிவிக்ரமனின் மற்றொரு முகம் கொடூரமானது. கங்காவின் மரணத்திற்குப் பின் தற்செயலாக வாசிக்கக் கிடைத்த அவளின் நாட்குறிப்புகள் அவரைக் காலமெல்லாம் வதைக்கின்றன. இதுவரை அவர் நம்பியிருந்த ஒழுக்கம், கண்ணியம், நேர்மை போன்றவை சிதிலமடைய, மனக்குமைச்சலுடன் எஞ்சிய

வாழ்க்கையை வாழவேண்டிய நெருக்கடிக்கு அவர் ஆளாகிறார். அவர் மண்ணுலகிலேயே நரகத்தில் இருப்பதைப் போல வாழ்ந்தார் என்பதே உண்மை.

திரிவிக்ரமன், அவரது மனைவி கங்காவை மரணத்திற்குப் பின் அவ்வுலகத்தில் பிம்பமாகச் சந்திக்கிறார். கங்கா அங்கும் அவரை நேசிக்கிறாள். கணவன் மனைவியாக வாழ்ந்த காலத்தில் கங்காவை அவர் புறக்கணித்த நிகழ்வுகளினால் மனதில் கலக்கமுற்று அவளது காலடியில் விழுந்து மன்னிப்பு கோருகின்றார். அவளோ, பழைய வாழ்க்கையை மறந்து விடுங்கள். நான் இன்னும் உங்களை நேசித்துக் கொண்டிருக்கிறேன் என்கிறாள். திரிவிக்ரமன்,

**"கங்கா நான் உன்னை நினைத்துக் கொண்டே வாழ்ந்தேன். நீ இருக்கும் போது இல்லாமலிருந்தாய் இல்லாத போது எல்லாமுமாய் இருந்தாய்....."[47]**

என்று கூறுவதிலிருந்து கணவன் மனைவி உறவு நிலையின் ஆழத்தை ஆசிரியர் உணர்த்தியுள்ளார். பரந்த மனமும் அடுத்தவர்களை அவர்தம் குறைபாடுகளோடு ஏற்றுக் கொள்ளும் உள்ளமும் இருந்தால் "தாம்பத்யம்" என்பது "போராட்டமாக" இல்லாமல் "நீரோட்டமாக" நீடிக்கும் என்பதை வலியுறுத்துகின்றார் ஆசிரியர்.

### 4.2.3. நலிந்த உறவுகளால் வரும் சிக்கலும் தீர்வும்

இன்றைய காலகட்டத்தில் விதையில்லா மாதுளம் பழத்தில் உள்ள சிறு விதைகளைப் போல உறவுகள் போலியாகப் போய்விட்டன. கூட்டுக் குடும்பங்கள் சிதைந்து நாம் சின்னச் சின்னத் தீவுகளாக சிதைந்து போய்விட்டோம். நம் உறவுமுறைகள் அனைத்தும் நீர்த்துப் போய்விட்டன. இன்றைய காலகட்டத்தில்,

**"சுகமாக இருப்பவர்களே நமக்குச் சொந்தக்காரர்கள். வசதியாக இருப்பவர்களே நமக்குச் சுற்றத்தினர். பணக்காரர்களாக உள்ளவர்களே பந்துக்கள். அதிகாரம் படைத்தவர்களே நமக்கு நண்பர்கள்"[48]**

என்ற நிலை உருவாகிவிட்டது. சுயநலம் உறவுகளுக்குள் துரோகம் செய்யவும் தூண்டுகிறது. இதனை "துரோகம்" கதையின் மீரா பாத்திரம் மூலம் எடுத்துக்காட்டுகின்றார் ஆசிரியர்.

**"முரளி-கீதா தம்பதிக்கு இரண்டாவதும் பெண் குழந்தையே பிறக்கின்றது. கீதாவின் தங்கை மீரா தன் தலைப் பிரசவத்திற்கு அக்கா வீடு வருகி ன்றாள். ஸ்கேனில் தனக்கு ஆண் குழந்தை பிறக்கப் போவது தெரிந்தும், தன் அக்காவிடம் தனக்கும் பெண் குழந்தையே பிறக்கப் போவதாகக் கூறுகிறாள். அப்பொழுதுதான் தன் அக்கா எவ்விதப் பொறாமையுமின்றி தன்னை கவனித்துக் கொள்வாள் என்று நினைக்கிறாள்"[49]**

பொறாமையும் சுயநலமும் உறவுகளுக்குள்ளேயே துரோகம் செய்யத் தூண்டுவதை இக்கதாப்பாத்திரம் படம் பிடித்துக் காட்டுகின்றது.

நம் தன்முனைப்பு யாரோடும் அனுசரித்துச் செல்ல நம்மை அனுமதிக்க மறுக்கின்றது. முதியோர் இல்லங்கள், அனாதை ஆசிரமங்கள், ஆதரவற்றோர் இல்லங்கள் யாவும்,

**"மனித நேயம் வற்றிப் போனதால் ஏற்பட்ட முற்றிப்**
**போன நோயின் முத்திரைகள்"**[50]

என்று சாடுகின்றார் ஆசிரியர். மன நலங்கெட்டு உதிர்ந்த சருகுகளாய் உள்ள நம் மனித உறவுகளை அன்பு, அரவணைப்பு, பாசம் ஆகிய சங்கிலிகளால் கட்ட முனைவது மட்டுமே சரியான தீர்வாகும் என்பது இறையன்பு காட்டும் வழியாகும்.

## 4.2.4. பெற்றோர்-பிள்ளைகளுக்கிடையேயான சிக்கலும் தீர்வும்

எத்தனை வகையான செல்வங்களைப் பெற்றிருந்த பொழுதும் மக்கட் செல்வத்தைப் பெறாதவர்களின் வாழ்க்கையில் வசந்தம் வீசுவதில்லை. எனவே தான் குழந்தைச் செல்வத்தின் சிறப்பினை வள்ளுவரும்,

**"குழலினிது யாழ் இனிது என்பதம் மக்கள்**

**மழலைச் சொல் கேளா தவர்"**[51]

உணர்த்துகின்றார்.

பெற்றோர்கள் தங்கள் சிறகுகளால் மூடி மூடித் தங்களின் வாரிசுகளைக் காப்பாற்ற முனையும்பொழுதெல்லாம் பிள்ளைகள் பறக்கிற முனைப்பைத் தொலைத்து விடுகிறார்கள். இன்றைய குழந்தைகள் துடிப்பானவர்கள். சுயமாகச் சிந்தித்துக் கேள்வி கேட்க ஆரம்பித்து விட்டார்கள். அவர்களின் சிந்தனைக்குக் கடிவாளம் போடாமல் சுதந்திரமாக அவர்களை விட வேண்டும். அவர்களின் ஆற்றலுக்குத் தேவையான தீனியைத் தர முயல வேண்டும்.

**"வெளியில் நிறைய வாசித்தும் உள்ளே நிறைய யோசித்தும்**
**தனித்தன்மையுடன் விளங்கும் குழந்தைகளே எதிர்காலத்தில் புதிய**
**அறிவியல் சிந்தனைகளும், தத்துவத் தாக்கங்களும், கணித நுட்பங்களும்,**
**இலக்கிய வீச்சுகளும் தோன்றக் காரணமாக இருக்கிறார்கள்"**[52]

என்கிறார் ஆசிரியர். வாழ்க்கை என்பது மதிப்பெண்களையும் பட்டங்களையும் கடந்தது.

**"நாம் இலக்குகளை நிர்ணயித்தால் அவை குழந்தைகளுக்குச்**

**சுமையாக இருக்கும் அவர்களே நிர்ணயித்துக் கொண்டால**

**இலக்குகள் சிறகுகளைப் போலச் சுகமாக இருக்கும்"**[53]

என்று கூறும் ஆசிரியர் குழந்தைகளை குழந்தைகளாகவே இருக்க விட வேண்டும். அவர்கள் மீது எதையும் திணிக்கக் கூடாது என்று நம்மை எச்சரிக்கின்றார்.

### 4.2.4.1. பெற்றோரின் அணுகுமுறை

குழந்தைகளின் உயர்வில் பெற்றோர் உவகை எய்துவதையும் அவர் தம் வளர்ச்சியில் பெற்றோரின் பங்களிப்பையும்,

**"தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து**
**முந்தி யிருப்பச் செயல்"[54]**

**"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச்**
**சான்றோன் எனக்கேட்ட தாய்"[55]**

போன்ற குறள்கள் பறைசாற்றுகின்றன. குழந்தைகளின் உயர்விற்காக பெற்றோர்கள் மேற்கொள்ளும் முயற்சிகள் பிள்ளைகளின் மனதை, அறிவைச் சிதைப்பதாக இருத்தல் கூடாது என்பதைக் குறிப்பிடும் ஆசிரியர், குழந்தைகளின் இறந்த காலத்தை இந்த நொடியிலேயே மறந்து விடுங்கள். உங்கள் குழந்தைகளை மற்ற குழந்தைகளோடு ஒப்பிடுவதை நிறுத்திவிடுங்கள் என்று அறிவுறுத்துகின்றார்.

குழந்தைகளுக்காகப் பணத்தைச் செலவழிப்பதை விட பாசத்தைப் பகிரும்படி கூறும் இறையன்பு, குழந்தைகளுக்கு,

**"அவர்களிடம் இருக்கும் அழகுணர்வை உணர வைப்பதே**
**பெற்றோரின் தலையாய கடமை"[56]**

என்றும்

**"குழந்தைகள் தங்களின் ஆற்றலை உணரும்படி செய்வதும்,**
**விழிப்புணர்வுடன் வாழ்க்கையை அணுகும் பயிற்சியைத் தருவதுமே**
**அவர்களின் ஆற்றலை முழுமையாக எட்டிப் பிடிக்க முடியும்"[57]**

கூறுகின்றார்.

பெரும்பாலும் எல்லாக் குடும்பங்களிலும் ஓரே குழந்தை என்ற நிலை ஏற்பட்டுவிட்டதால், குழந்தைகளின் ஆசைகளும் தேவைகளும், அவர்கள் கேட்காமலேயே நிறைவு செய்யப்படுகின்றன. அதனால் அவர்களுக்கு பொருட்களின் அருமையும் பணத்தின் மதிப்பும் நேரத்தின் மகத்துவமும் தெரிவதே இல்லை.

**"குழந்தைகளுக்கு வறுமையும் தெரிய வேண்டும். பெற்றோர்**
**தங்களுக்காகப் படுகிற துன்பமும் துயரமும் தெரிய வேண்டும்.**
**பசியும் அறிய வேண்டும். பிணிக் கொடுமைகளும் உணரப்பட வேண்டும்.**
**உழைப்பின் உன்னதமும் வியர்வையின் மகத்துவமும் போதிக்கப்பட**
**வேண்டும். அதுதான் எவற்றை எப்படித் தேட வேண்டும்**
**என்கிற நேர்மையைக் கற்றுத் தரும் சூழலை உண்டாக்கும்."[58]**

என்கிறார் இறையன்பு. பெற்றோர்களின் சிறப்பினைக் குறிப்பிடுகையில்,

**"பெற்றோர்கள் கண்ணுக்குத் தெரிகிற கடவுள்கள்.**

**கோவில் இல்லாத தெய்வங்கள்"[59]**

என்று கூறும் இறையன்பு, பெற்றோரின் உண்மை நிலையினைப் பிள்ளைகள் உணர்ந்து கொண்டால் அவர்கள் கூறும் அறிவுரைகள் விரிவுரையாகத் தோன்றாமல் கைவிளக்காகப் பயன்படும் என்றும் பெற்றோர்களை மதிக்காமல் எவ்வளவு பெரிய சான்றிதழ்களைப் பெற்றாலும் அது குப்பையாகவே கருதப்படும் என்று குழந்தைகளுக்கும் அறிவுட்டுகின்றார்.

## 4.3. சமுதாயம் எதிர்கொள்ளும் சிக்கல்களும் தீர்வும்

சமூகம் என்பது மனித உறவுகள் பின்னிப் பிணைந்துள்ள நிலையைக் குறிப்பதாகும். மனிதன், கூடி வாழத் தொடங்கி, என்றைக்குச் சமுதாயத்தைத் தோற்றுவித்தானோ அன்றே சமூகச் சிக்கல்களும் தோன்றிவிட்டன.

### 4.3.1. பசிப்பிணி இல்லா சமுதாயம்

ஒரு நாடு நல்ல நாடாகத் திகழ பசி, பிணி, பகை இல்லாது இருக்க வேண்டும். இதனை வள்ளுவர்,

**"உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்**

**சேரா தியல்வது நாடு"[60]**

என எடுத்துரைக்கின்றார். அது போல ஒரு சமுதாயம் சிறந்து விளங்க அங்கு வாழும் மக்களுக்கு வாழ்விடம், உணவு, உடை, நீர் இதில் எவ்விதக் குறைபாடும் இல்லாதிருக்க வேண்டும். இந்த உலகில் வாழும் அனைத்து உயிர்களுக்கும் உணவு என்பது அவசியமானது. எனவே தான்,

**"வயிற்றுக்குச் சோறிட வேண்டும்**

**இங்கு வாழும் மனிதருக் கெல்லாம்"[61]**

என்றும், மண்ணுலகில் வாழும் உயிர்களுக்கெல்லாம்,

**"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" [62]**

என்றும் இலக்கியங்கள் போற்றுகின்றன. மனிதனின் அடிப்படை உரிமையில் முதன்மையானது உணவு. கட்டாயம் அனைவருக்கும் உணவு கிடைக்க வேண்டும் என்ற நிலையில் தான் பாரதியும் பசியின் கொடுமையை உணர்ந்து,

**"தனியொருவனுக்கு உணவில்லையெனில்**

**இந்த சகத்தினை அழித்திடுவோம்"[63]**

என்று கொதித்தெழுகின்றார். மனிதர்கள் அனைவருக்கும் போதிய அளவு உணவு கிடைக்கிறதா? என்று கேட்டால் இல்லை என்றே சொல்ல வேண்டும் இதனை,

**“பசி அவர்களது நரகம்**
**உணவு சொர்க்கம்**
**என வாழும்**
**இதயங்கள்”[64]**

என்ற வரிகள் உணர்த்துகின்றன. பசிப்பிணி அகல, மனிதர்கள் அனைவரும் பசித்திருப்பவனைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். தேவைக்கதிகமாக உண்பதும் உணவை வீணடிப்பதும் ஏழு கொடிய பாவங்களுள் ஒன்று. ஓருயிர் இன்னொரு உயிரை உணவாகக் கொள்ளுவது இயற்கை நியதியாகும். தேவைக்கு மட்டுமே உணவு உண்ணும் பழக்கத்தை விலங்குகளிடம் இருந்து மனிதன் கற்றுக் கொள்ள வேண்டும் என்கிறார் இறையன்பு.

உணவு உற்பத்தியில் ஒரு நாடு தன்னிறைவு பெற்று விளங்க வேண்டும் என்பதாலேயே வள்ளுவரும் உழவுத் தொழிலைப் போற்றி,

**“சுழன்றும் ஏர்பின்னது உலகம்” [65]**

என்றும்

**“உழுவார் உலகத்தார்க்கு ஆணி ” [66]**

என்றும் கூறினார். இதே கருத்தை,

**“வயலில் விதைப்பவனும் மலரை வளர்ப்பவனும்**
**மரத்தை வளர்ப்பவனும் மானிடரில் மகத்தானவன்”[67]**

என்று மேலை நாட்டுப்பாவலரான விட்டயர் கூறுவதாக இறையன்பு குறிப்பிடுகின்றார்.

**“பொன்னைப் புதையுங்கள் -- அது**
**பருவம் முடிந்தாலும்**
**அப்படியே இருக்கும்**
**நெல்லை விதையுங்கள் -- அது**
**பல் மடங்காகிக்**
**பலன் தரும்”[68]**

என்று எட்வர்ட் எவரெட் கூறுவதை அடியொற்றிய இறையன்பு அவர்கள் “கலப்பையே வேதம்” என்கிறார்.

வேளாண்மை என்பது நம் நாட்டைப் பொறுத்த வரை இந்த மண்ணோடு மண்ணாகச் செழித்து வளர்ந்த ஒரு வாழ்க்கைமுறை. வேளாண்மை வெறும் வயிற்றைக் கழுவுவதற்கான வழி மட்டுமல்ல. வாழ்க்கையை ஒளிர்விக்கின்ற ஓர் உத்தி. தானிய உற்பத்தியில் தன்னிறைவு அடைந்த பின்னும் மனித இனம், நோய் நொடியில்லாமல் வாழ ஊட்டச் சத்துக்களில் தன்னிறைவு அடைவது இன்றியமையாத ஒன்றாகும். புரதச் சத்து நிறைந்த பருப்பு வகைகளைப் போதுமான அளவு விளைவிப்பதில் நாம் அக்கறை காட்ட வேண்டும். ஒரு ஏக்கர்

நிலத்தில் அதிகபட்சம் இரண்டு டன் அரிசி உற்பத்தி செய்யலாம். ஆனால் பத்து டன் பப்பாளி அல்லது எட்டு டன் அன்னாசி உற்பத்தி செய்வதால் நமக்குத் தேவையான தாதுப் பொருட்களும் வைட்டமின்களும் கிடைக்கும். இதனால் எரிபொருள் செலவும் குறையும் என்கிறார் இறையன்பு. வேளாண்மையிலிருந்து தோட்டக் கலைக்கு மாற வேண்டிய காலத்தின் கட்டாயத்தில் உள்ளோம் என்பதையும் நமக்கு உணர்த்துகின்றார்.

### 4.3.1.1. வறுமை எனும் நோய்

இந்தியத் திருநாட்டில் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாடி வருந்துவோர் ஏராளமானோர். சரிந்து கிடக்கும் பொருளாதாரத்தோடு சமகாலத்தை எதிர்கொள்வதில் இவர்களுக்கு ஏற்படும் சங்கடங்கள் ஏராளம். அவர்கள் வறுமைக் கோட்டிற்கு மேலே வாழ்பவர்களைப் போலவே தாமும் வாழ்வதாகப் பல நேரங்களில் நடித்து போலியாக வாழ நேர்கின்றது. அடித்தட்டு மக்களின் குறைந்த பட்ச தேவைகள் நிறைவேறும்பொழுதே சமுதாயம் முன்னேறும். உணவு பற்றி குறிப்பிடுகையில்,

**"இங்கு பட்டினியால் சிலருக்கு யாத்திரைகள்**
**சிலருக்குப் பசி வரவும் பல மாத்திரைகள்"**[69]

என்றும் ஆடையைச் சுட்டும் பொழுது,

**"சில ஆடையில்லாத**
**உடல்களுக்கு**
**ஆடை கிடைப்பது**
**பாடையிலே படுக்கும் போது**
**மட்டும் தான்"**[70]

என்றும், ஏழைகளின் வீடு பற்றி கூறும் பொழுது,

**"தென்றலுக்கே**
**தாக்குப் பிடிக்க மறுக்கும்**
**அந்தக் குடிசைகளை நினைத்து**
**என் மனதில்**
**புயலடித்தது"**[71]

என்றும் இறையன்பு கூறுவதிலிருந்து அவர் வெயில், மழை, பனி, இரவு, பகல் ஆகிய இயற்கைச் சூழல்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ள ஒரு நல்ல இருப்பிடம் கூட இன்றி சராசரி மனிதன்அவதிப்படுவதை எண்ணி வருந்துவது புலனாகின்றது.

### 4.3.1.2. பொதுவுடைமை

மனிதனுக்கு அடிப்படையான உணவு, உடை, உறைவிடம் போன்றவை சிக்கலின்றிக் கிடைக்க வேண்டுமானால் எந்த ஒரு பணியையும் செய்யத் தயங்கக் கூடாது. எல்லாப் பணியிலும் உயிரோட்டம் இருக்கிறது. தனது தேவையைப்

பூர்த்தி செய்து கொள்ளத் துடிக்கும் எவரும் மற்றவரை உயர்வாகவே எண்ண வேண்டும்."செருப்புத் தொழிலாளியும் கழனியில் களை எடுப்பவரும் நம் சாதி "என்று ஒவ்வொருவரும் நினைக்கும் பொழுது உயர்வு தாழ்வற்ற சமூகம் மலரும் என்பதை,

**"ஒவ்வொரு பணியிலும்**
**உயிர் இருக்கின்றது**
**காலில்**
**முள் குத்துகிற போதுதான்**
**செருப்புத் தொழிலாளியின் வியர்வை**
**நமக்கு புரிகின்றது**
**வறட்சி வருகின்ற போதுதான்**
**கழனியில் உழைப்பவர்களின்**
**கண்ணீரின் கனம்**
**நமக்குப் புலப்படுகின்றது"**[72]

என்ற வரிகளிலும்,

**"கழனியில் களை எடுப்பவருக்கும்**
**கம்பியூட்டர் இயக்குபவருக்கும்**
**ஒரே மரியாதை தரப்பட்டால் தான்**
**பொதுவுடைமை பூத்ததாக**
**நாம்**
**புன்னகைக்க முடியும்"**[73]

என்ற வரிகளிலும் கூறுவதால் பொதுவுடைமை ஒன்றே இச்சிக்கல்களுக்கானத் தீர்வு என்பது புலனாகின்றது.

### 4.3.2. கற்றல்-கற்பித்தலில் ஏற்படும் சிக்கல்களும்-தீர்வும்

வளமான அறிவார்ந்த சமுதாயம் உருவாக, வயிற்றுப் பசி தீர்வதோடு அறிவுப் பசியும் தீர வேண்டும். அதற்கு, சமுதாயத்தில் உள்ள அனைவருக்கும் அனைத்துக் குழந்தைகளுக்கும் தடையற்ற கல்வி கிடைத்திட வேண்டும். ஏனெனில் கல்வி ஒன்று தான் நம்மை இவ்வுலகிற்கு அடையாளம் காட்ட சிறந்த கருவியாகும்.

கல்வி, மனிதனின் அனைத்துத் திறன்களையும் வெளிக் கொணர்கின்றது. அறிவும் ஆற்றலும் சார்ந்த நிலையே கல்வி. மனிதனை முழுமையடையச் செய்வதோடு மனித வாழ்க்கையின் ஆதாரப் பண்புகள் கல்வியாலேயே பாதுகாக்கப்படுகின்றன. நாட்டின் வளர்ச்சியைத் தீர்மானிக்கும் கல்வி எந்தச் சூழலிலும் ஒருவனுக்கு அழிவைத் தராது. அதனாலேயே வள்ளுவரும்,

**"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு**
**எழுமையும் ஏமாப் புடைத்து"**[74]

என்று கல்வியின் பயனை விளக்கியுள்ளார். கல்வியைப் பற்றிக் குறிப்பிடுகையில்,

**"வாசிப்பு ஒரு முழுமையான மனிதனையும் எழுதுவது ஒரு சரியான**
**மனிதனையும் உருவாக்குகின்றது"**[75]

என்று பேக்கன் குறிப்பிடுவதைச் சுட்டும் இறையன்பு,

**"கல்வி என்பது தன்னை உணரவைக்கிற**
**சாதனமாக இருக்க வேண்டும்"** [76]

எனும் கொள்கையையும் வலியுறுத்துகின்றார்.

நல்ல குடிமைப் பண்பினை வளர்ப்பது கல்வியின் தலையாயக் கடமை. கல்வி என்பது கடந்த காலத்தையொட்டிய ஒன்றாக அமையாமல், நிகழ்காலத்தை உருவாக்கி, வருங்காலத் தேவைகளுக்கு நம்மை தயார்படுத்தும் வகையில் அமைய வேண்டும். கல்வியின் இலக்கு செம்மையான மாந்தர்களை உருவாக்குவதே ஆகும்.

**"உள்ளத்தின் விருப்புக்களைக் கட்டுப்பாட்டுக்குள் கொணர்ந்து**
**பயனுடையதாக ஆக்குவதே கல்வி. அத்தகைய கல்விதான்**
**கற்போரை தன்னம்பிக்கை உள்ளவராகவும் உரம் மிக்க உள்ளம்**
**உடையவராகவும் வளர்க்கும்."**[77]

### 4.3.2.1. பிள்ளைகளின் படிப்புச் சுமை – தீர்வு

இன்றைய நடுத்தர வர்க்கத்தினர், குழந்தைகளுக்குத் தருகின்ற முதலீடாக படிப்பு மட்டுமே இருப்பதால், தன் சக்திக்கு மீறி நல்ல பள்ளியில் படிக்க வைக்க விரும்புகின்றனர். தன்னுடைய ஆசைகளை குழந்தைகள் மீது திணிப்பதால் கல்வியானது திசைமாறிப் போகின்றது. குழந்தைகள் பள்ளிக்குச் செல்லும்பொழுது முதுகில் புத்தகத்தைச் சுமப்பதோடு நெஞ்சில் சோகத்தையும் சுமக்கின்றனர்.

**"பௌர்ணமி நிலவாய்**
**முழுமையாய்ப்**
**பூரண ஒளியோடு**
**சீருடை அணிந்து**
**பள்ளிக்குப்**
**புறப்பட்ட**
**என் குழந்தைகள்**
……………………………
**பேருந்தில்**
**ஒடுங்கிய முகத்தோடு**
**நட்சத்திரங்களாய்**
**தெறித்து விழுந்தன"**[78]

எனும் கவிதையிலிருந்து பௌர்ணமி நிலவான குழந்தைகள் பல நெருக்கடியில் சிக்கிச் சிதைந்து நட்சத்திரங்களாய் தேய்வது புலனாகின்றது.

பெற்றோர் தங்கள் குழந்தைகள், நாற்றங்காலிலேயே தனது ஆற்றல்களையெல்லாம் காட்டிவிட வேண்டுமென்று விழைகின்றனர். குழந்தைகளை மேதைகளாக்கத் துடிக்கும் அவர்கள், நல்ல மனிதர்களாக்க மறந்து விடுவதை,

**"காலைச் சாப்பாட்டிலேயே**

**மகன் வளர்ந்துவிட வேண்டுமென்று**

**அதிகப்படியான பதார்த்தங்களைத் தொண்டையில்**

**திணித்தால் வளர்ச்சி வராது**

**வாந்தி தான் வரும்"[79]**

என்று சுட்டுவதன் மூலம் தெளிவுபடுத்துகின்றார் ஆசிரியர்.

### 4.3.2.2. அறிவின் திறவுகோல் கல்வி

கல்வி நுனிப் புல் மேய்வதாக இல்லாமல், ஆரோக்கியமான வாழ்விற்கு அடித்தளம் இடுவதாக அமைய வேண்டும்.

**"கற்க கசடறக் கற்றவை கற்றபின்**

**நிற்க அதற்குத் தக"[80]**

என்ற வகையில் கல்வி கற்கும் முறை அமைய வேண்டும். கல்வி என்றால் கற்பது, கற்றுக் கொண்டே இருப்பது, கற்றவைகளின் வழி நிற்பது. ஆனால், இன்றைய கல்வி முறையோ, சுய சிந்தனையை வளர்ப்பதாகவோ விழிப்புணர்வு அடையச் செய்வதாகவோ இல்லாமல் மாணவர்களை "மனனம்" என்னும் மாயையில் சிக்க வைப்பதாகவே இருக்கின்றது.

**"கல்வியின் நோக்கம் நம்மை தெரிந்ததிலிருந்து தெரியாதவற்றை**

**நோக்கி அழைத்துச் செல்வதாக இருக்க வேண்டும். இருட்டிலிருந்து**

**வெளிச்சத்திற்கு வழி நடத்துவதாக இருக்க வேண்டும். நம்மிடம்**

**இருக்கும் முனைப்பையும் ஆர்வத்தையும் மழுங்கடிக்கச் செய்கின்ற**

**கல்வி நமக்குத் தேவையில்லை"[81]**

என்கிறார் இறையன்பு. மனப்பாடம் செய்வது காலப்போக்கில் மறந்து போய்விடும். நினைவில் வைத்துக்கொள்வதே இயல்பானது என்பதை,

**"மனனம் என்பது செயற்கையானது. நினைவில் நிறுத்திக் கொள்வதே**

**இயல்பானது.விருப்பம் இருப்பதை நாம் மறப்பதே இல்லை.**

**ஆகவே ஒன்றை நினைவில் வைத்துக் கொள்ள அதன்**

**மீது உள்ள ஆர்வமே முக்கியக்காரணம்"[82]**

என்று கூறுவதன் மூலம் கற்பதற்கு ஆர்வமே முக்கியம் என்பது புலனாகின்றது.

### 4.3.2.3. கற்கும் முறை

கற்கும் கல்வி, படிப்பவர்களிடம் சில மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். நல்ல மாற்றங்களை ஏற்படுத்தும் வாசிப்பே தரமான, தகுதியான வாசிப்பாகும். மதிப்பெண்களுக்காக வாசிப்பதும், குருட்டு மனப்பாடம் செய்வதும் தகுதியான குடிமகனை உருவாக்காது.

**"மனப்பாடம் செய்து அப்படியே எழுதுகின்ற ஆயிரம் வரிகளை விட சுயமாகச் சிந்தித்து எழுதும் ஒருவரி மேம்பட்டது"[83]**

என்று கூறும் இறையன்பு, வாசிப்பை சுவாசிப்பாக நினைத்து ஈடுபாட்டுடன் செயல்பட்டால் மாணவர்கள் சிகரத்தை அடைய முடியும் என்கிறார். சிகரத்தை அடைய நினைக்கும் மாணவர்கள்,

⇒ வாசித்தல்

⇒ நினைவில் வைத்துக் கொள்ளுதல்

⇒ ஞாபகப்படுத்திப் பார்த்தல்

⇒ படித்தவற்றை வகையாக வெளிப்படுத்துதல்

⇒ எழுதியவற்றைத் திரும்ப வாசித்தல்

⇒ திருத்துதல்

⇒ மறுமுறை வாசித்தல்

என்ற ஏழு படிக்கட்டுகளைக் கடக்க வேண்டும். மாணவர்கள் தங்களது பலம், பலவீனம், வாய்ப்பு, ஆபத்துகள் போன்றவற்றைப் பட்டியலிட்டுத் தயார் நிலையில் இருப்பது மாணவர்களின் கல்வியியல் பயணத்தின் வழித்தடம் என்கிறார் இறையன்பு.

### 4.3.2.4. ஆசிரியர்-மாணவர்-சிக்கலும் தீர்வும்

மாணவர்களின் குற்றங்களைக் களைந்து, அவர்களை நல்வழிப்படுத்துபவரே ஆசிரியர் ஆவார். ஆசிரியர்களை நிலம், மலை, மலர், துலாக்கோல் போன்றவற்றுடன் நன்னூல் ஒப்பிடுகின்றது. மாணவர்கள் தம்மை துன்பத்திற்கு உள்ளாக்கினாலும் பொறுத்துக் கொள்ளும் ஆசிரியர் நிலத்திற்குச் சமமாவார். எங்கிருந்து பார்த்தாலும் தெளிவாகத் தெரியும் மலை போல, தமது அறிவால் அனைவராலும் அண்ணாந்து பார்க்கக் கூடியவராய் விளங்குபவர்கள் நல்லாசிரியர்கள். மலர், தம்மைச் சார்ந்தவரையும் மணக்கச் செய்வது போல, நாடி வந்தவர்களுக்குத் தமது அறிவைப் புகட்டும் ஆசிரியர்கள் துலாக்கோல் போல பேதமின்றி கல்வி கற்பிப்பார்கள். அத்தகைய ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் சிக்கல்களாகப் பின்வருவனவற்றைக் கூறலாம்.

⇒ வகுப்பறை கட்டுப்பாட்டில் இல்லாத பொழுது,

⇒ மாணவர்களின் ஒழுங்கீனத்தைக் காணும் பொழுது,

⇒ ஆசிரியரை விட அதிகம் அறிந்தவனாக மாணவன் தன்னைக் காட்டிக் கொள்ளும் பொழுது,

⇒ மதிப்பீடு என்ற பெயரில் கேள்விகளையும் விசாரணைகளையும் சந்திக்கையில்,

ஆசிரியர்களின் மகிழ்ச்சி கை நழுவிப் போகின்றது. இச்சிக்கலில் இருந்து வெளிவருவதற்கான தீர்வு "PCDA Formla".

| | | |
|---|---|---|
| **"Plan Meticulously** | **--** | **தெளிவாகத் திட்டமிடுங்கள்** |
| **Check Properly** | **--** | **முறையாகச் சரிபாருங்கள்** |
| **Do Intelligently** | **--** | **புத்திசாலித்தனமாகச் செய்யுங்கள்** |
| **Act Accordingly** | **--** | **தக்கபடி செயல்படுங்கள்"**[84] |

என்கிறார் சுவாமி விமூர்த்தானந்தர்.

வகுப்பறையைக் கட்டுக்குள் வைத்துக் கொள்ள கற்றலும் கற்பித்தலும் உயிர்ப்புடன் நடைபெற வேண்டும். ஆசிரியர்கள் தனது பாடத்தில் நல்ல அறிவு பெற்றவராகவும் கருத்துப் பரிமாற்றத் திறனை நாளும் வளர்த்துக் கொள்பவராகவும் இருந்தால் வகுப்பு அவரது கட்டுப்பாட்டில் இருப்பது உறுதி. இத்தகு திறமை மிக்க ஆசிரியர்களாக "சேவியர் வாத்தியார்" என்ற கதையில் வரும் சேவியரும், "சாகாவரம்" என்ற நாவலில் வரும் நசிகேதனும் விளங்குவதை இறையன்பு படைப்பின்வழி அறிய முடிகின்றது. ஆசிரியர் நித்திய மாணவராக, எப்போதும் கற்பவராக இருந்தால் மட்டுமே மாணவர்களின் நிலையைப் புரிதலுடன் அவரால் அணுக முடியும்.

கற்பித்தலின் பல கூறுகளான மாணவனைப் பாராட்டுதல், ஆர்வத்தைத் தூண்டி விடுதல், திரும்பக் கூற வைத்தல், வினா எழுப்பச் சுதந்திரம் தருதல் போன்றவற்றை ஆசிரியர்கள் தக்கபடி பயன்படுத்தினால் வகுப்பறை அவர்கள் வசமாவது உறுதி என்கிறார் இறையன்பு.

மாணவர்கள் கணினியின் துணையோடு, ஆசிரியரை விடத் தங்களை உயர்ந்தவர்களாகக் காட்ட முயலும் பொழுது, அவர்கள் விரும்புவதை வீட்டுப் பாடமாகத் தந்து அவர்களை ஊக்குவிக்கலாம். மாணவர்களிடம் ஒழுங்கீனத்தைக் காணும்பொழுது அத்தகைய மாணவர்களைத் தனிமையில் சந்தித்துப் பேச வேண்டும். வகுப்பறை சாராத செயல்களான பள்ளிக் கண்காட்சி, நாடகம் போன்றவற்றில் அவர்களை ஈடுபடுத்தி, பொறுப்புகள் தந்து, அன்பினால் அவர்களின் குறைகளை நீக்க முயற்சி செய்ய வேண்டும். என்னுடைய ஆசிரியர் என் முன்னேற்றத்திற்காகத்தான் பாடம் நடத்துகின்றார் என்கிற நம்பிக்கையை மாணவர்களிடமிருந்து பெறுவதே ஆசிரியரின் தலையாய பணியாகும்.

### 4.3.2.5. படிப்புச் சுகமாக மாற - தீர்வு

படிப்பது சுமையாக இல்லாமல் சுகமாக இருக்க அது திணிக்கப்படாமல் இருக்க வேண்டும். கல்வி ஊட்டுவதாக இல்லாமல் உண்பதாக இருக்கும் பொழுது கற்றலில் எவ்விதச் சிக்கலும் ஏற்படாது என்று கூறும் இறையன்பு, குழந்தைகளுக்குப் பள்ளிகளில் முதல் இரண்டு வருடங்கள் அன்பு குறித்த பாடங்கள், மனிதநேயம் குறித்த கதைகள், பாடல்கள் மட்டுமே சொல்லித் தரப்பட வேண்டும் என்கிறார்.

**"பூக்களே அவர்கள் புத்தகங்கள்**
**வண்டுகளே வாசக சாலைகள்**
**பறவைகளின் பாடல்களில்**
**பரிட்சைக் கேள்விகள்**
**நடனமும் மகிழ்ச்சியுமே நாட்டுப்பண்"**[85]

என்ற நிலை உருவாகும்பொழுது குழந்தைகளின் மனதில் விதைப்பது பசுமரத்தாணியாய் பதியும் என்கிறார்.

### 4.3.3. சாதிச் சிக்கலும் தீர்வும்

பாரதியின் வழியில் பாட்டுத் திறத்தாலே இவ்வைத்தைப் பாலித்திட நினைக்கும் இறையன்பு, கெட்ட போரிடும் உலகத்தை வேரோடு சாய்த்து, புதியதோர் உலகம் படைக்கவும் நினைக்கின்றார். ஆனால் அதற்கு முட்டுக்கட்டையாய் இருப்பது சாதி என்ற தடை.

**"சுப்புராய செட்டியார்**
**நகரில்**
**கோவிந்தசாமி முதலியார்**
**தெருவில்**
**குப்புசாமி ஆசாரி**
**மண்டபத்தில் நடக்கும்**
**கவிதைப் போட்டி தலைப்பு**
**சாதிகள் இல்லையடி பாப்பா"**[86]

தெருக்களின் பெயர்களில் இருக்கும் சாதி மனித மனங்களிலும் அழியாமல் ஒட்டிக் கொண்டதே என்று வருந்துகின்றார். வளரும் சமுதாயம் வளமானதாய் அமைய சாதி வேறுபாடு வேரோடு களையப்பட வேண்டும் என்பதற்காகவே,

**"சாதிகள் இல்லையடி பாப்பா"** [87]

என்று பாரதி குழந்தைகளிடம் பாடினார். ஆனால் இங்கு

**"குழந்தைகளுக்கு அம்மை குத்துவதற்கு முன்பே**
**சாதி முத்திரை குத்தப்படுகின்றது"**[88]

என்று வேதனைப்படுகின்றார் இறையன்பு.

எந்தச் சாதியில் பிறந்தோம் என்று எண்ணாமல் "சாதிக்கப் பிறந்தவர்களே" நாம் என்ற நினைப்பு நம்மனைவரிடமும் வர வேண்டும். சமுதாயத்தில் ஆழமாகப் பதிந்துள்ள சாதி எனும் வேரை மொத்தமாகக் கிள்ளி எறிய வேண்டும். கலப்பு திருமணத்தால் தான் சாதிக்குச் சமாதி கட்ட முடியும் என்ற சமுதாயக் கண்ணோட்டம் கொண்டவர் இறையன்பு என்பதை,

**"சமுதாயத்தின்**
**சாதி என்ற**
**அழுக்குப் படிந்த முகத்தின் மீது**
**காறி உமிழ்வதற்காக**
**நான் என் கடைவாயில்**
**தேக்கி வைத்திருக்கும்**
**எச்சலின் ஈரம் காய்வதற்குள்**
**உன்னை நான் கைப்பிடிக்க வேண்டும்"[89]**

எனும் வரிகள் எடுத்துரைக்கின்றன.

காதல் மணம் அல்லது கலப்பு மணம் மட்டுமே சாதிச் சிக்கலுக்கு முழுமையான தீர்வாகுமென்று சொல்லிவிட முடியாது.

**"காதல் என்பது ஓர் உணர்வு. எந்த உணர்வும் நிரந்தரமாக இருக்க முடியாததைப் போலத்தான் காதலும் .அழியாமல் இருக்க அது ஒன்றும் எண்ணெய் ஓவியமல்ல. அது பல நேரங்களில் கிறுக்கல். சில நேரங்களில் சறுக்கல் என்பதை காலப் போக்கில் கண்டு கொள்ளலாம்"[90]**

என்று காதலைத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுகின்றார் இறையன்பு.

ஆண் பெண் நேசிப்பில் பொருளாதாரக் கண்ணோட்டம் மேலோங்கி இருப்பதையும் உயர்ந்த நிலைக்குச் செல்வதற்கான படிக்கட்டுகளாகக் காதலை, காதலர்கள் நினைப்பதை,

**"அவனுக்குத் தெரியும்**
**அவர்கள் நேசிப்பதெல்லாம்**
**அவனையல்ல**
**கௌரவமான நிலைக்குக்**
**கல்யாணமானதும்**
**தன்னையும் அழைத்துச் செல்லக் கூடிய**
**அவன் பதவியையே"[91]**

என்று படம் பிடித்துக் காட்டுவதன் மூலம், காதலும் பணத்தின் அடிப்படையிலேயே எழுவது புலனாகின்றது.

காதலிக்கும் காலத்தில், நிறைகளை மட்டுமே வெளிப்படுத்தும் காதலர்கள், திருமணத்திற்குப்பின் குறைகள் தெரியவரும் பொழுது தாங்க முடியாமல் திருமண பந்தத்ததை அறுக்கவும் துணிகின்றனர். காதலித்து கலப்பு மணம் புரிந்தவர்கள்,

**"கலப்புத் திருமணம் புரிந்த தம்பதியினர்**
**வீட்டில் வளர்க்கத் தேடினர்**
**சாதி நாயாய்"**[92]

என்று கூறுவதிலிருந்தும், "தெவச சாப்பாடு" கதையின் தலைவன், காதலித்து வேற்று சாதிப் பெண்ணை மணந்தபொழுதும் அவன் இல்லத்தின் சடங்குகளில் அவளைச் சேர்த்துக் கொள்ளாமல் தள்ளி வைப்பதிலிருந்தும் சாதிச் சிக்கலுக்கு காதலோ, கலப்பு மணமோ மட்டுமே தீர்வாகி விடாது என்பது புலனாகின்றது.

இராமர், படகோட்டியான குகனைத் தன் சகோதரனாய்ச் சேர்த்துக் கொண்டு, அவனுக்குத் தன் இதயத்தில் இடமளித்தது போலவே இட ஒதுக்கீடு இதய ஒதுக்கீடாக மாறும் பொழுது மட்டுமே இச்சிக்கலுக்குத் தீர்வு ஏற்படும் என்கிறார் இறையன்பு.

## 4.3.4. சமயச் சிக்கலும் தீர்வும்

இறைவனை வணங்குவது மட்டுமே ஆன்மீகம் ஆகிவிடாது. ஆன்மீகம் என்பது சமயம் சார்ந்த ஒன்றாகத் தெரிந்தாலும் அது மதத்தைக் கடந்த ஒன்று என்பதை,

**"ஆன்மீகம் என்பது மதம் அல்ல**
**தியானம் என்பது சடங்கு அல்ல**
**தேடுதல் என்பது மந்திரம் அல்ல**
**துறத்தல் என்பது உடை குறைத்தல் அல்ல**
**ஞானம் என்பது அறிவு அல்ல"**[93]

என்று இறையன்பு சுட்டிக்காட்டுகின்றார்.

செய்யும் செயலில் மனித மனம் முழுமையாய் இலயிப்பதே ஆன்மீகம். செய்யும் தொழிலை தெய்வமாகக் கருதி முழுஅர்ப்பணிப்புடன் அதைச் செய்பவனே உண்மையான ஆன்மீகவாதி என்பதை,

**"மகாராசாவுக்குச் செருப்புத் தைக்கிற போதும்**
**மண் வேலை செய்பவனுக்குச் செருப்புத் தைக்கிற போதும்**
**ஒரே அக்கறையுடன் தியானிப்பவனே ஆன்மீகவாதி"**[94]

என்று இறையன்பு சுட்டுகின்றார். உறக்கத்திலும் விழிப்புணர்வு, கோபத்திலும் பொறுமை, தருவதிலும் பணிவு, பெறுவதிலும் கம்பீரம் என்று வாழக் கற்றுக் கொள்வதே உண்மையான ஆன்மீகம் என்கிறார் ஆசிரியர்.

### 4.3.4.1. ஆத்திகம்-நாத்திகம்

ஆத்திகம், நாத்திகம் என்பன எதிரெதிர் துருவங்களாகத் தோன்றிய பொழுதிலும் நவீன இசைக் கருவிகளுக்கிடையே வரும் புல்லாங்குழல் இசையைப் போல "*மனிதம்*" தேடிய பயணமே ஆன்மீகப் பயணம்.

**"இங்கே கற்கள் ஒன்றுதான்**
**உருவங்கள் மட்டும் வெவ்வேறாக"**[95]

என்று கூறுவதிலிருந்து ஆத்திகமும் நாத்திகமும் அவரவர் பார்வையைப் பொறுத்ததே என்பது புலனாகின்றது.

திருவிழா நாளில் கோவிலுக்குச் செல்லும் பக்தன் கூட்ட நெரிசலில் சிக்கிச் சீரழிந்து கசக்கிப் பிழியப்பட்டு, நொறுங்கி நாத்திகனாய் வெளியேறும் அவலமே இன்று தொடர்கிறது.

**"ஆத்திகருக்குக் கருவறை போதும்**
**நாத்திகர் மகிழ்ந்திட பிரகாரம் முழுவதும்"**[96]

விழிப்புணர்வுடன் வாழ்க்கையை நோக்கினால், மலர்களால் அலங்கரிக்கப்பட்ட நறுமணத்தோடு கூடிய பாதை நம்மை நோக்கி விரியும். அத்தகைய விழிப்புணர்வை பெறுவது, நாம் தேர்ந்தெடுக்கும் வாழ்க்கைப் பாதையைப் பொறுத்தது என்பதை இறையன்பு,

**"இலக்கியத்தின் மூலம் தேடியவர்கள் பாரதி, தாகூர்**
**ஓவியம் மூலம் தேடியவர்கள் பிகாஸோ, ரவிவர்மா**
**பயிர்கள் மூலம் தேடியவர்கள் ஃப்யூகோ**
**உயிர்களின் மூலம் தேடியவர்கள் தெரஸா"**[97]

என்னும் வரிகளால் விளக்குகின்றார். விழிப்புணர்வு இல்லையென்றால் வாழ்க்கையில் வசந்த காலம் என்பதே வராமல் போய்விடும். வாழ்க்கை, வறண்ட பாலைவனமாகிவிடும். எதிர்பார்ப்பு இல்லாமல் செய்கிற பொழுது உழைப்புக் கூட வழிபாடாக மாறும் என்கிறார்.

### 4.3.4.2. போலி சாமியார்

பக்தி சுயநலமாகவும் வேண்டுதல் பேராசையாகவும் மாறிவிட்டதால், இன்று பக்தியின் பெயரால் போலி சாமியார்கள் உருவாகி விட்டனர். கடவுளிடம் பேரம் பேசுவதையும் உயிர்பலி இடுதலையும் சாடும் இறையன்பு,

**"நைவேத்தியம் செய்தவற்றை**
**எல்லாம்**
**சாமியே சாப்பிட்டு விட்டால்**
**படைப்பதால்**
**பரவசப்படுவீர்களா**
**சொல்லுங்கள்"**[98]

என்று கூறுவதால் , பகுத்தறிவுடன் நம்மைச் செயல்படக் கூறும் வேளையில், கடவுள் பெயரைச் சொல்லி ஏமாற்றுவோரையும் போலி ஆசாமிகளையும் சாடுகின்றார். ஆன்மீகம் பற்றிக் குறிப்பிடுகையில்,

**"ஆன்மீகம் என்பது சாமி கும்பிடுவதில் இல்லை. எந்த உயிரையும் துன்புறுத்தாமல் இருப்பது தான் உண்மையான ஆன்மீகம்"[99]**

என்று கூறும் இறையன்பு, உறவுகளின் நெருக்கடியில் இருந்து தப்பிப்பதற்கு ஆன்மீகம் வழி வகுக்கும் எனும் நிலையைப் போலி சாமியார்கள் உருவாக்கி விட்டனர் என்கிறார். விபூதி கொடுக்கிறேன், லிங்கம் கொடுக்கிறேன் என்று ஆன்மீகத்தின் பெயரால் சித்து வேலை செய்பவர்களால், ஆன்மீகத்தை உணரவோ பிறருக்கு உணர்த்தவோ முடியாது என்பதை,

**"புகழுக்கும் பணத்திற்கும் ஆசைப்பட்டுத் திரிகிற யாரும் உண்மையான ஆன்மீகத்தை உணர்த்த முடியாது"[100]**

என்று இறையன்பு குறிப்பிடுகின்றார்.

### 4.3.4.3. மதம்-மார்க்கம்

மதங்கள் என்பது மார்க்கம். கடவுளை அடைவதற்கான வழி, தர்மம். ஆனால் மதத்தின் பெயரால் மனிதர்கள் மடிந்து போவது காலங் காலமாய்த் தொடரத்தான் செய்கிறது. மனித வாழ்வுக்கு வலு சேர்ப்பதற்காகச் சொல்லப்பட்ட அறங்கள் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டு, மத வெறியர்கள் கையில் ஆயுதங்களை எடுத்து சமயத்தின் பெயரால் வழிபாட்டுத் தலங்களை அழித்தொழிக்கும் காலம் இது.

மதம் என்கிற மொட்டு ஆன்மீகமாக மலர அன்புதான் தென்றலாக வீச வேண்டும். எல்லா மதங்களும் அன்பு ஒன்றையே போதிக்கின்றன. வன்மத்தை சாடவே செய்கின்றன.

மதத்தலைவர்கள் தங்களுடைய பிழைப்பு நல்லபடியாய் நடக்க, தாங்கள் அரைகுறையாய் அறிந்த செய்திகளைக் கூறி மக்களைக் குழப்பி குளிர்காய்கிறார்கள்.

மதங்கள் மார்க்கமாக இருக்கும் வரையில் சிக்கல் இல்லை. மூர்க்கமாக மாறும் பொழுதே சிக்கல் உருவாகிறது. "தன்னிகரற்ற திருக்கோயில்கள்" என்ற கட்டுரையில் இறையன்பு அவர்கள்,

**"கோவில்களுக்குச் சென்று கடவுளைத் தரிசித்து அருள் பெறுக" என்று எழுதாமல், கோவில்களைத் தரிசித்து, அதன் வரலாற்றை அறிந்து, சிற்பங்களைக் கண்டு மகிழ்ந்து, நம்மை மேலும் புதுப்பித்துக் கொள்வோம். கட்டட அமைப்பினைக் கண்டு ,அதன் நுட்பத்தை உணர்ந்து ,நம்மை உயர்த்திக் கொள்வோம். மனித நேயமே மெய்ஞ்ஞானத்தின் முதல்படி" [101]**

என்று எழுதியிருப்பதன் மூலம் அவருள் ஒளிரும் பகுத்தறிவினை உணர முடிகிறது.

“கோவில் என்பது கோபுரம் மட்டுமல்ல. அது கலையின் வெளிப்பாடு. அர்ப்பணிப்பின் அடையாளம். சிற்பங்களின் கூடம். ஓவியங்களின் சாம்ராஜ்யம். அமைதியின் இருப்பிடம். வழிபாட்டின் பிறப்பிடம்” என்று கூறும் இறையன்பு, பூசல் மனம் படைத்த அனைவரையும் அமைதிப் பாதைக்குத் திரும்ப அறைக்கூவல் விடுகிறார்.

“போர் இல்லாத உலகம்”, “பூசல் இல்லாத கிராமம்”, “இயற்கையை அழிக்காத மனிதன்”, “மன அழுக்குகள் அகன்ற மனிதன்”, “அமைதியான இல்லம்”, “அறமே உலகப் பொதுமறை என்ற எண்ணம்” என தான் காண விரும்பும் இலட்சிய உலகிற்கு நம்மையும் அழைத்துச் செல்கின்றார்.

### 4.3.5. அலுவலகச் சிக்கல் - தீர்வு

ஒரு நாடு செழிக்க மழைவளம் எத்துணை முக்கியமோ அத்துணை அளவு மக்களின் உழைப்பும் இன்றியமையாததாகும். இல்லையெனில் பெய்யும் மழைநீர் வீணாகிவிடும். உள்ளே போகிற நீர் வெளியே வந்து தான் தீர வேண்டும். இளம் பருவத்தில் ஒருவருக்கு வியர்வை வாய்க்காலாகப் பெருகி வழியாவிட்டால், கடைசி காலத்தில் கண்ணீர் கால்வாயாகப் பெருக்கெடுக்கும் என்பதை,

**“இளமைப் பொழுதில் கடுமையாக உழைக்கக் கற்றுக் கொண்டால்**
**பின்னாளில் துன்பம் ஏதுமில்லை”**[102]

என்ற வரிகள் உணர்த்துகின்றன.

செய்கின்ற பணியில் தன் உழைப்பு முழுவதையும் ஒருங்கே இணைத்து அதில் முழுமையைக் காண்பதே பணிப்பண்பாட்டின் இலக்கணம்.

**“மனிதன் தண்ணீரில் மூழ்கி மூழ்கித் திணறி இறந்திருக்கிறான்.**
**ஆனால் வியர்வையில் மூழ்கி ஒரு போதும் மாய்ந்ததில்லை”** [103]

கடினமான பணிகளைச் செய்து முடிப்பதில்தான் சாதனை அடங்கியிருக்கிறது. வேதனை வேர்கள் பூக்கும்பொழுதுதான் சாதனை மலர்கள் சாத்தியமாகின்றன. கடின உழைப்பிற்கு பல தடைகள் வரலாம். எதிரிகள் உருவாகலாம். எதிரிகளே இல்லாதோர் இங்கு எவருமில்லை. எதிரிகளால் வரும் தடைகளை, படிகளாய் மாற்றி முன்னேறி வெற்றி பெறுவதே சிறப்பானது.

ஆளும் அதிகார வர்க்கம், உழைக்கும் வர்க்கத்தைக் காலங்காலமாய் உறிஞ்சியே வந்துள்ளது. உழைப்பை உறிஞ்சி வாழும் நிர்வாக அமைப்பை,

**“உனக்கு ஒருபோதும் தெரியாது ஒவ்வொரு**
**முறையும் நாங்கள் படுகின்ற வேதனை”**[104]

என்று வளையல் போடும்பொழுது மணிக்கட்டைப் பார்த்து விரல்கள் சொல்லின என “ஆளும் வர்க்கம்” என்ற தலைப்பில் செய்தியைக் குறியீடாக்கி மொழிகின்றார் ஆசிரியர். உழைப்பு ஓரிடம் பலன் ஓரிடம் என்பது புலப்படுகின்றது.

முன்பு, அதிகாரிகள் திறமை மிக்கவராக இருந்தனர். அதனால் அவர்களின் அறிவும் ஆற்றலும் மதிக்கத் தக்கதாக இருந்தது. இது பணியாளர்களிடையே மரியாதை கலந்த அச்சத்தை ஊட்டியது. தற்போதைய அதிகார வர்க்கம் பணத்தால் பதவியை அடைவதால் ஊழியர்கள் அவர்களை அலட்சியப் படுத்துகிறார்கள். தங்களைக் கண்டு நடுங்கியபடிதான் தொழிலாளிகள் இருக்க வேண்டும் என்பதற்காகவே,

**"என்னப்பா உள்ளே இவ்வளவு குளிர்**
**ஏசியைக் குறைக்கக் கூடாதா? என்றார்.**
**அவர்,**
**பெரிய அதிகாரியிடம் பதில் சொல்லும் போது**
**சற்று நடுங்கிக் கொண்டே**
**சொல்ல வேண்டும்**
**என்பதற்காகத் தான் இந்த ஏற்பாடு"**[105]

என்று தந்திரம் செய்வதாக கேலி செய்கிறார் இறையன்பு.

ஒரு நிறுவனம், வெற்றிகரமாகச் செயல்பட ஐந்து கடமைகளை வரையறை செய்கிறார் ஆசிரியர். வாடிக்கையாளரை முதன்மைப்படுத்துதல், தரமான பொருள் உற்பத்தி, குறைந்த விலை, தொடர்ந்த சேவை, பணியாளர்களுக்கு நியாயமான கூலி, பணிக்கொடை, தேவையான ஓய்வு போன்றவற்றுடன் நிறுவனங்கள் சமூகப் பொறுப்புடனும் பணியாற்றும் பொழுது அந்நிறுவனம் உயர்வடையும். ஒருவர் செய்கிற பணியில் முழு ஈடுபாட்டுடன் முறையாக உழைக்கும்பொழுது, அப்பணி தூய பணியாக மலர்கிறது. பணிப்பண்பாட்டின் மூலம் நிர்வாகம், தொழிலாளர் நல்லுறவும் பேணப்படுகின்றது. செய்யும் பணி மேன்மை அடையும் பொழுது, பணியுடன் நாமும் மேன்மை அடைவோம்.

## 4.3.6. சுற்றுச்சூழல்

இயற்கை எல்லா உயிர்களையும் ஒவ்வொரு காரணத்தோடு உருவாக்கித் தந்திருக்கிறது. காலத்தின் சுழற்சியில், பருவநிலை மாற்றத்தில், புவிப்பந்தின் மேல் சில உயிர்கள் மறைந்து போவதும் சில உயிர்கள் உருவாவதுமான நிகழ்வுகள் தொடர்ந்த வண்ணம் உள்ளன. இயற்கையை வெல்ல முடியும் என்பது மேற்கத்திய இயல்பு. இயற்கையோடு இயைந்து நடந்து கொள்ள வேண்டும் என்பது கிழக்கத்திய மனப்பான்மை.

ஆதிகாலத்து மனிதன், இயற்கைக்குப் பயந்து அதைப் பாதுகாத்து போற்றி வணங்கி வாழ்ந்தான். அத்தகைய சூழலில் அவன் வளமாகவும் நலமாகவும் இருந்தான். தற்பொழுது அதற்கு மாறாக, மனிதனின் செயல்பாடு அமைந்துள்ளது. "வளமையான பாரதம்" இன்று வளமிழந்து காணப்படுகிறது. அவசரச் சிகிச்சை அளிக்கா விட்டால் நாடே சுடுகாடாகி விடும் என்கிறார் இறையன்பு.

### 4.3.6.1. சுற்றுச்  சூழல் சிதைவால் ஏற்படும் சிக்கல்

**"நட்சத்திர தீபங்களை**
**ஏற்றி வைத்து**
**நிலவின் நல்வரவிற்காகத்**
**தினமும் கார்த்திகை**
**கொண்டாடும் வானம்"[106]**

இதனை நாம் மாசுபடுத்திவிட்டோம். ஆகாயத்தில் ஓட்டை விழச் செய்து விட்டோம். மழைமானியான மரங்களை அழிப்பதன் மூலம் நாட்டை அழிவுப் பாதைக்கு அழைத்துச் செல்கின்றோம்.

**"இனி ஒரு மரம் கூட வெட்டப்படக் கூடாது**
**நோட்டீஸ் ஒட்டப்பட்டது.**
**இதை அச்சிடத் தேவைப்படும் காகிதங்களுக்காகப்**
**பல  மரங்கள் வெட்டப்பட வேண்டியிருக்குமே**
**சுற்றுச் சூழலே சுற்றும் சூழலாகும்"[107]**

மரங்கள் வெட்டப்படும்பொழுது மண் அரிப்பு ஏற்பட்டு, தொடர்ந்து சுற்றுச் சூழல் அழியும் நிலை ஏற்படும் என்று எச்சரிக்கின்றார் இறையன்பு. சுற்றுச் சூழல் பற்றி புத்தகம் எழுதுவதை விட புதிய மரக் கன்றுகளை நடலாம்.

நம் வாழிடத்தைச் சுற்றிக் காணப்படும் மண்ணும், மண் சுமந்த மலைகளும், நீரும்,  விண்ணும், உயிரினங்களும் மற்றும் இயற்பியல் வேதியியல் காரணிகளுமே சுற்றுச்சூழல் ஆகும். பெரிய அணைகள் கட்டப்படுவதால் அதிகமான பரப்பில் வனங்கள் அழிக்கப்படுகின்றன. இதனால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுகிறது. இயற்கையின் எந்த ஒரு சிறு கூறு பாதிப்புக்குள்ளானாலும் சுற்றுச்சூழல் சிக்கலாகின்றது. ஆகவே வளர்ச்சி எனும்  பெயரில் மனிதன் இயற்கைக்கு எந்த சேதத்தை விளைவித்தாலும் அது ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல.

**"எந்த ஒரு வளர்ச்சிக்கான நடவடிக்கையும் அது செயல்படும்**
**சுற்றுச்சூழலைக் கணக்கில் எடுத்து கொள்ளாவிடில்  நீண்ட**
**நாட்களுக்கு நீடிக்க முடியாத ஒரு நிலைக்கே இட்டுச் செல்லும்"[108]**

என்கிறார் நா. கருணாநிதி.

ஒவ்வொரு தாவரமும் உயிரினங்களும் அதற்கேற்ற சூழ்நிலையிலேயே உருவாகும். இயற்கையாக இருக்கும் ஒன்றை அழித்து வேறொரு இடத்தில் அதை நிறுவமுடியாது.

**"மூழ்கப் போற பரப்பளவுக்கு ஏத்த மாதிரி ஒரு இலட்சம் ஹெக்டேர்**
**வனம் அமைப்பதற்கு நிலமே கிடையாதுன்னு சொல்றாங்க**
**மகாராஷ்டிராவில் அழிஞ்சு போற காட்டுக்கு மாற்றாக ராஜஸ்தானில்**
**காடுகளை உண்டாக்குகிறது முட்டாள்தனம்"[109]**

எனும் சுதீரின் கூற்று மூலமாகச்சுற்றுச்சூழல் பாதிக்கப்பட்டால் ஏற்படும் விளைவுகளை ஆசிரியர் வெளிப்படுத்தியுள்ளார்.

**"மரங்கள் இல்லாத பூமியை**
**பறவைகள் இல்லாத உலகத்தை**
**விலங்குகள் இல்லாத பிரபஞ்சத்தை**
**பட்டாம்பூச்சிகள் இல்லாத அண்டத்தை**
**குயில்கள் இல்லாத தோட்டங்களை**
**நந்தவனங்களற்ற சூழலை**
**நினைத்துப் பார்க்க முடியுமா"[110]**

மின்விசிறிகளின் சுழற்சியில் இனி அனல் காற்றே வீசும். பூமிக்குகைகளில் நீர் ஊற்றுகள் மறைந்து போகும். அருவிகள் எல்லாம் குருவிகளுக்குக் கூட பற்றாத அளவு குறைந்து சுரக்கும். மேகமற்ற வானம், மழையற்ற மண்டலம், தென்றலற்ற வீடு இவையே வருங்காலம். இயற்கையை இளைஞர்கள் போற்றக் கற்றுக் கொள்ளாதவரை எந்த முன்னேற்றமும் நீடிக்காது என்று இயற்கையின் பேரழிவைச் சாடுகின்றார் இறையன்பு.

### 4.3.6.2. அணைக்கட்டுகளால் ஏற்படும் சிக்கல்கள்

பெருகிவரும் நீர்ப்பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காக அணைகள் கட்டப்படுகின்றன. நதிகளின் குறுக்கே கட்டப்படும் அணைகளால் இயற்கையும் அதனைச் சார்ந்து வாழும் மனித இனமும் சிக்கலில் சிக்கித் தவிக்கின்றது.

**"நர்மதை நதி நீர்த் திட்டத்தில் 30 பெரிய அணைகளும், 135 நடுத்தர அணைகளும் 3000 சிறிய அணைகளும் கட்டப்பட உள்ளன. விளைவு பல்லாயிரக்கணக்கான மக்கள் சூழல் அகதிகளாவர்"[111]**

என்கிறார் ஜே. தர்மராஜ்.

**"உலகம் முழுவதும் தற்போது 15 மீட்டர் உயரத்திற்கு அதிகமான சுமார் 40,000 அணைகள் உள்ளன. இவை பெரும்பாலும் கடந்த ஐம்பது ஆண்டுகளில் கட்டி முடிக்கப்பட்டவையாகும். நாட்டின் சுற்றுச்சூழலைப்பாதிக்கக் கூடிய அரசின் முன்னேற்றத் திட்டங்களில் அணைகளும் ஒன்றாகும்"[112]**

என்பார் ஜே. தர்மராஜ்.

"ஆத்தங்கரை ஓரம்" நாவல் அணைகட்டுகளால் ஏற்படும் முக்கியமான பிரச்சினைகளாக இயற்கை வனங்களின் அழிவையும், குடிபெயர்த்துக் குடியமர்த்தலையும் எதார்த்தமாகச் சித்தரிக்கிறது. அணைகட்டும்பொழுது இழப்பு ஏற்படுகின்ற வனத்துக்குப் பதிலாக புதிய வனத்தை உருவாக்க வேண்டும் என்ற சட்டம் இருக்கின்றதே என்ற கேள்விக்கு,

**"வாஸ்தவந்தான், இழக்கறத்துக்கு இணையாக எந்தக் காட்டையும் உருவாக்க முடியாது. வளங்கறது வெறும் மரம், செடி, கொடிகள்**

**மட்டுந்தானா? அதுல இருக்கிற உயிரினங்களும்தான். பறவை, விலங்கு, பூச்சி, பூஞ்சான் எல்லாமே வனம்தான். அதையெல்லாம் செயற்கையா நம்மால் உருவாக்க முடியுமா? இயற்கை தேர்ந்தெடுத்து உருவாக்கற வனத்தை ஒப்பிட முடியுமா? வழுக்கைத் தலையில் முடியை ஒட்ட வைச்ச மாதிரிதான் இந்த செயற்கை வனம்"[113]**

என்று அணைக்கட்டுவதால் ஏற்படும் சிக்கலை ஆசிரியர் பதிவு செய்கிறார்.

### 4.3.6.3. இயற்கை வளங்களின் அழிவு – சிக்கலும் தீர்வும்

வளங்களை அதிக அளவில் அழிப்பதால் பசுமை இல்லவிளைவு (Green House Effect) என்ற பாதிப்பு ஏற்படுகிறது. வளிமண்டலத்தில் காற்றுகள் ஒன்று சேர்ந்து வெப்பத்தை உள்ளிழுக்கின்றது. இதனை"பசுமை இல்லவிளைவு"என்பர். காற்றை மாசுபடுத்தும்பொழுது பூமி மேலும்வெப்பமடைகின்றது. அணைகள் கட்டப்படுவதாலும்,சில சரிவர திட்டமிடப்படாத காரணங்களினாலும் நிலவளம், பயிர்நிலங்கள், தாவர மற்றும் விலங்குகள், வனப்பகுதிகள்அழிவுக்குள்ளாகின்றன. ஆத்தங்கரை ஓரம் நாவலில் வரும் கோவிந்த பாய்,

**"ஆரோக்கியத்தைத் தேக்கித் தன்னை உருமாற்றி**
**உண்ணக் கொடுக்கும் கரிசல் மண்"[114]**

என நதி நீரினால் வளம் பெற்றுள்ள சித்தூர் கிராமத்தின் மண் வளத்தினை நினைத்துப் பெருமிதம் கொள்கிறார்.

**"ஒவ்வொரு அணை கட்டப்படும் பொழுதும் எத்தனை ஆயிரக் கணக்கான ஹெக்டேரில் உள்ள இயற்கை வளங்கள் அழிக்கப்படுகின்றன? நம் அறிவிற்கே அகப்படாத எத்தனையோ தாவரங்களும், உயிரினங்களும் தண்ணீரில் மூழ்கி மறைகின்றன தெரியுமா? ஒரு அணை பெரிய அளவில் கட்டப்படும் பொழுது எந்த அளவிற்குச் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுகிறது தெரியுமா? ........................ நம்மால் செயற்கையாக இந்த இயற்கைச் செல்வங்களையெல்லாம் எப்படி ஈடுகட்ட முடியும்?"[115]**

எனக் கேட்கும்பொழுது இயற்கை வளங்களின் அழிவு பற்றிய உணர்வு வெளிப்படுகின்றது.

இயற்கையோடு இணைந்து வாழ்ந்த ஆதிமனிதன் இன்பமாய் வாழ்ந்தான். இயற்கையைச் சிதைத்து வாழும் மனிதன், இருக்கும் இடம் தெரியாமல் சிறுத்துப் போவான். மனிதன் தன் சுயநலத்திற்காக இயற்கையை ஆளத் தொடங்கினான். இயற்கை இறைவனின் கையொப்பம். அதை இரசிக்காதவன் மனிதனே இல்லை. இயற்கையை இரசிக்கக் கற்றுக் கொள்ள வேண்டுமென்பதை,

“அதிகமாக மலரை

நேசிப்பவர்கள்

அதைச் செடியிலே சிரிக்க விடுகிறார்கள்”[116]

என்று இறையன்பு கூறுவதிலிருந்து அவரின் இரசிப்புத் தன்மை நம்மையும் பற்றிக் கொண்டு சிந்திக்கத் தூண்டுகிறது.

எந்த ஓர் அருவியிலும் குப்பைகளைப் போடக் கூடாது. அருவி என்பது இறைவன் கொடுத்த கொடை. அதற்கு நாம் நன்றி சொல்வதன் மூலம் இயற்கையும் மகிழ்ச்சியாக இருக்கும். இயற்கையோடு இயையும்பொழுது, மனித வாழ்க்கையும் மேம்படுகிறது. இதனை உணர்ந்து ஒவ்வொரு மனிதனும் இயற்கையைப் பாதுகாக்க வேண்டும் என்று இறையன்பு வலியுறுத்துகின்றார்.

## 5. தொகுப்புரை

- வாழ்க்கை எப்போதும் சுகமாகவே இருந்து விடுவதில்லை. போராட்டங்களும் சிக்கல்களும் நிறைந்ததே வாழ்க்கை.
- சிக்கல்கள் எங்கிருக்கின்றதோ தீர்வுகளும் அங்கேயே இருக்கின்றன.
- சிக்கல்களை தனிமனிதச் சிக்கல், குடும்பச் சிக்கல், சமுதாயச் சிக்கல் என மூன்று விதமாகப் பிரிக்கலாம்.
- தனிமனிதச் சிக்கல்களுக்கு அவரவரே காரணமாகின்றனர். பொதுவாக சிக்கலுக்கான காரணிகள் பொறாமை, அதீத ஆசை, கோபம் இவை மூன்றுமே ஆகும்.
- திறமை இருந்தும் சோம்பல், முயற்சியின்மை போன்ற காரணத்தாலேயே பல சிக்கல்கள் தோன்றுகின்றன.
- சுயநலமாய் சிந்திப்பதை விடுத்து துணிவுடனும் விழிப்புணர்வுடனும் தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ள வேண்டும்.
- பரிந்துரையின் துணைகொண்டு, குறுக்கு வழியில் முன்னேறுவதை விட, திறமைகளை வளர்த்துக் கொண்டு, இலக்கை நோக்கி பயணிப்பது பலன் தரும்.
- கோபத்தை விடுத்து, வெற்றிக் களிப்பில் துள்ளாமல், தோல்வியைக் கண்டு துவளாமல் நேரச் சிந்தனையோடு செயல்படுவது வெற்றிக்கு அடிப்படை.
- குடும்பச் சிக்கல்களை- கணவன்-மனைவி இடையேயான சிக்கல், உறவுகளுக்கிடையேயானசிக்கல், பெற்றோர்-குழந்தைகளுக்கிடையேயான சிக்கல் என மூன்றாகப் பிரிக்கலாம்.
- கணவன், மனைவி மீதும், மனைவி, கணவன் மீதும் உரிமைகளைக் கொண்டாடுவதே சிக்கலுக்கு அடிப்படைக் காரணம்.
- விட்டுக் கொடுத்தல், வேலைகளைப் பகிர்ந்து செய்தல், புரிதல் இவையே அச்சிக்கல்கள் தீர்வதற்கான வழிகளாகும்.

- ❖ பெற்றோர்கள் தங்கள் ஆசைகளை, குழந்தைகள் மீது திணிப்பதே அவ்விருவரிடையே சிக்கல் உருவாகக் காரணமாகிறது.
- ❖ கல்வி மட்டுமே வாழ்க்கையல்ல. அதனைத் தாண்டியும் உலகம் உள்ளது என்பதை குழந்தைகள் உணரும்படிச் செய்ய வேண்டும்.
- ❖ குழந்தைகளை குழந்தைகளாகவே இருக்க விட வேண்டும். அவர்களுடன் பணத்தை மட்டுமே பகிர்ந்து கொள்ளாமல் பாசத்தையும் பகிர வேண்டும்.
- ❖ சமுதாயம் எதிர்கொள்ளும் பிரச்சனைகளில் முக்கியமானது வறுமை.
- ❖ வறுமை நீங்கி வளமை பூக்க, உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைவதுடன் தோட்டக் கலையிலும் நாட்டம் கொள்ள வேண்டும்.
- ❖ செய்கின்ற பணியை முழு ஈடுபாட்டுடன் செய்ய வேண்டும். பொதுவுடைமை ஒன்றே வறுமை தீர ஒரே வழி.
- ❖ குடிமைப் பண்புமிக்க நல்ல சமுதாயத்தை உருவாக்குவதே, சமுதாயச் சிக்கலை எதிர்கொள்ளும் வழியாகும்.
- ❖ அறிவின் திறவுகோலான கல்வி, சுமையாக இல்லாமல் சுகமாக மாற வேண்டும்.
- ❖ கல்வி நிலையங்கள், வணிகத்தலங்களாக இல்லாமல் மாணவர்களை, அவர்தம் திறமைகளை வளர்க்கும் தலமாக மாற வேண்டும்.
- ❖ ஆசிரியர் மாணவர் உறவு, புரிதலுடன் கூடியதாய், வகுப்பறை வசந்தமாய் மாற வேண்டும்.
- ❖ என் முன்னேற்றத்திற்காகவே ஆசிரியர் பாடம் நடத்துகிறார் என்ற எண்ணம் ஒவ்வொரு மாணவனுக்கும் வர வேண்டும்.
- ❖ சமுதாயம் எதிர்கொண்டுள்ள சாதிச் சிக்கல் தீர, கலப்பு மணம், காதல் மணம் வழி வகுத்தாலும், அது நிரந்தர தீர்வாகாது.
- ❖ இட ஒதுக்கீடு இதய ஒதுக்கீடாய் மாறும்பொழுதுதான் இச்சிக்கலுக்கு நிரந்தர தீர்வு கிட்டும்.
- ❖ மதம், பக்தி சார்ந்த சிக்கலுக்கு மதத்தின் மீது கொண்ட மூர்க்கமே காரணம்.
- ❖ மற்றவர் துன்பத்தை உணர்பவர்களே ஆத்திகர், அதை உணர முடியாதவர்கள் நாத்திகர்கள்.
- ❖ பக்தி சுயநலமாக, வெளி வேடமாக மாறிவிட்டதால் பக்தியின் பெயரால் போலி சாமியார்களின் வருகையும் அதிகரித்து விட்டது.
- ❖ பகுத்தறிவோடு செயல்படும்பொழுது நமக்குள் இருக்கும் கடவுட் தன்மை புலப்படும்.
- ❖ அதிகாரி-தொழிலாளி இடையேயான சிக்கல் காலங்காலமாய்த் தொடர்கிறது. அதிகாரிகள் திறமைமிக்கவர்களாக, தொழிலாளிகளின் உழைப்பை மதிப்பவராக இருக்கும் பொழுது தொழிலாளிகளும் அதிகாரிகள் மீது மதிப்பும் மரியாதையும் செலுத்துவர்.

- ❖ சுற்றுப்புறத்தை, தூய்மையாகவும், இயற்கையைப் பாதுகாக்கும் சிந்தனையோடும் பராமரித்தால் சுற்றுச்சூழல் மாசுபடாது.
- ❖ உலகின் அரணான வளங்கள், பேணி பாதுகாக்கப்படும்பொழுது இயற்கை தன் கருணையை மழையாய்ப் பொழியும்.
- ❖ இயற்கையோடு இயைந்து வாழும்பொழுது மனித வாழ்வு மேன்மையடையும்.

## அடிக்குறிப்புகள்

1. மென்காற்றில் விளைசுகமே,இறையன்பு.வெ., ப. 50
2. நமது சமூகச் சீர்கேடுகள், உதயமூர்த்தி. எம்.எஸ்., ப. 2
3. ஓடும்நதியின் ஓசை Iஇறையன்பு.வெ., ப. 88
4. இறையன்புவின் சிந்தனை வானம், சுந்தர ஆவுடையப்பன், ப. 139
5. இறையன்பு படைப்புலகம் I ,இராஜேந்திரன், ப. 63-64
6. மேலது, ப. 63
7. எப்போதும் இன்புற்றிருக்க,இறையன்பு.வெ., ப. 73
8. ஓடும் நதியின் ஓசை II,இறையன்பு.வெ., ப. 1
9. மென்காற்றில் விளை சுகமே,இறையன்பு.வெ., ப. 115
10. ஓடும் நதியின் ஓசை II, இறையன்பு.வெ., ப. 2
11. ஓடும் நதியின் ஓசை I ,இறையன்பு.வெ., ப. 94
12. ஏழாவது அறிவு II,இறையன்பு.வெ., ப. 6
13. ஓடும் நதியின் ஓசை II ,இறையன்பு.வெ., ப.122
14. முகத்தில் தெளித்த சாரல், இறையன்பு.வெ., ப. 19
15. சின்னச் சின்ன வெளிச்சங்கள் . பதிப்புரை
16. ஓடும் நதியின் ஓசை III ,இறையன்பு.வெ., ப. 116
17. பூனாத்தி ,வருமானத்திற்கதிக சொத்து,இறையன்பு.வெ., ப. 63
18. திருக்குறள் , திருவள்ளுவர், எண். 35
19. முகத்தில் தெளித்த சாரல், இறையன்பு.வெ., பக். 20, 21
20. திருக்குறள்,திருவள்ளுவர், எண். 428
21. பாரதியார் கவிதைகள், பாரதியார், ப. 105
22. ஏழாவது அறிவு I ,இறையன்பு.வெ., ப. 39
23. திருக்குறள், திருவள்ளுவர், எண் 616
24. மென்காற்றில் விளைசுகமே, இறையன்பு.வெ., ப. 85
25. திருக்குறள், திருவள்ளுவர், எண் 29
26. ஏழாவது அறிவு I, இறையன்பு.வெ., ப. 53
27. திருக்குறள், திருவள்ளுவர், எண் 306
28. மென்காற்றில் விளை சுகமே,இறையன்பு.வெ., ப. 37
29. ஏழாவது அறிவுI,இறையன்பு.வெ., ப. 55

30. வாழ்க்கையே ஒரு வழிபாடு, இறையன்பு.வெ., ப. 138

31. மேலது, ப. 143

32. திருக்குறள் , திருவள்ளுவர், எண். 490

33. முகத்தில் தெளித்த சாரல், இறையன்பு.வெ., ப.15

34. உள்ளொளிப் பயணம், இறையன்பு.வெ., ப. 287

35. ஓடும் நதியின் ஓசை II ,இறையன்பு.வெ., ப. 116

36. ஏழாவது அறிவு III ,இறையன்பு.வெ., ப 23

37. பாரதியார் கவிதைகள், பாரதியார், ப. 69

38. முகத்தில் தெளித்த சாரல், இறையன்பு.வெ., ப. 48

39. ஓடும் நதியின் ஓசை II ,இறையன்பு.வெ., ப. 5

40. மென்காற்றில் விளை சுகமே ,இறையன்பு.வெ., ப. 28

41. ஒரு கதவும் கொஞ்சம் கள்ளிப்பாலும், தாமரை, ப.80

42. பூபாளத்திற்கொரு புல்லாங்குழல், இறையன்பு.வெ., ப. 85

43. மேலது, ப. 87

44. திருக்குறள், திருவள்ளுவர், எண் 1302

45. மென்காற்றில் விளை சுகமே ,இறையன்பு.வெ., ப. 28

46. பூபாளத்திற்கொரு புல்லாங்குழல், தாரத்தின் பின்னே, இறையன்பு.வெ., ப. 48

47. அவ்வுலகம், இறையன்பு.வெ., ப. 184

48. ஓடும் நதியின் ஓசை I ,இறையன்பு.வெ., ப. 63

49. அழகோ அழகு , துரோகம் இறையன்பு.வெ., ப. 73

50. ஓடும் நதியின் ஓசை I ,இறையன்பு.வெ., ப. 62

51. திருக்குறள், திருவள்ளுவர், எண் 66

52. ஏழாவது அறிவு III ,இறையன்பு.வெ., ப. 150

53. மென்காற்றில் விளை சுகமே, இறையன்பு.வெ., ப. 43

54. திருக்குறள், திருவள்ளுவர், எண் 67

55. மேலது, எண் 69

56. வாழ்க்கையே ஒரு வழிபாடு, இறையன்பு.வெ., ப. 10

57. மேலது, ப. 7

58. மேலது, ப. 18

59. உன்னோடு ஒரு நிமிடம், இறையன்பு.வெ., ப. 98
60. திருக்குறள்,திருவள்ளுவர், எண். 734
61. பாரதியார் கவிதைகள், பாரதியார், ப. 497
62. மணிமேகலை, பாத்திரம் பெற்ற காதை, வரி. 96
63. பாரதியார் கவிதைகள், பாரதியார், பாரத சமுதாயம், வரி எண் 22, 23
64. பூபாளத்திற்கொரு புல்லாங்குழல், சருகுகள் சலசலக்கின்றன, இறையன்பு.வெ., ப. 26
65. திருக்குறள், திருவள்ளுவர், எண் .1031
66. மேலது, எண் .1032
67. வாழ்க்கையே ஒரு வழிபாடு, இறையன்பு.வெ., ப. 83
68. மேலது, ப. 83
69. மேலது, ப. 24
70. பூபாளத்திற்கொரு புல்லாங்குழல், ஏழ்மை, இறையன்பு.வெ., ப. 81
71. மேலது, சருகுகள் சலசலக்கின்றன, ப. 26
72. வாய்க்கால் மீன்கள், இறையன்பு.வெ., ப. 17
73. மேலது, ப. 17
74. திருக்குறள், திருவள்ளுவர், எண் .398
75. மென்காற்றில் விளை சுகமே ,இறையன்பு.வெ., ப. 57
76. ஏழாவது அறிவு I, இறையன்பு.வெ., ப. 181
77. இந்திய சமுதாயத்தில் கல்வி ,இலட்சுமி, ப. 70
78. பூபாளத்திற்கொரு புல்லாங்குழல், மாநகரக் கல்வி முறை, இறையன்பு.வெ., ப. 96
79. வைகை மீன்கள், இறையன்பு.வெ., பக் 132-133
80. திருக்குறள், திருவள்ளுவர், எண் .391
81. வேடிக்கை மனிதர்கள், இறையன்பு.வெ., ப. 21
82. ஓடும் நதியின் ஓசை I,இறையன்பு.வெ., ப. 121
83. மேலது, ப. 120
84. இராமகிருஷ்ண விஜயம், விமூர்த்தானந்தர், ஜூலை மாதம் 2014 ப. 7
85. வைகை மீன்கள், இறையன்பு.வெ., ப. 12
86. பூபாளத்திற்கொரு புல்லாங்குழல், விரலைக் கிள்ளும் நகம்,

இறையன்பு.வெ., ப. 32

87. பாரதியார் கவிதைகள், பாரதியார், ப. 500

88. ஓடும் நதியின் ஓசை II ,இறையன்பு.வெ., ப. 221

89. பூபாளத்திற்கொரு புல்லாங்குழல், இந்தப் புல்லாங்குழல் ஒரு பூபாளத்திற்காக, இறையன்பு.வெ., பக். 43, 44

90. வேடிக்கை மனிதர்கள், இறையன்பு.வெ., ப. 3

91. வாய்க்கால் மீன்கள், இறையன்பு.வெ., ப. 56

92. ஓடும் நதியின் ஓசை II ,இறையன்பு.வெ., ப. 220

93. வாழ்க்கையே ஒரு வழிபாடு, இறையன்பு.வெ.,ப. 2

94. மேலது, ப. 123

95. பூபாளத்திற்கொரு புல்லாங்குழல், ஆத்திகமும் நாத்திகமும், இறையன்பு.வெ., ப. 39

96. சறுக்கு மரம்,கலைகளை ரசிப்போம், இறையன்பு.வெ., ப. 110

97. வாழ்க்கையே ஒரு வழிபாடு,இறையன்பு.வெ., ப. 5

98. பூபாளத்திற்கொரு புல்லாங்குழல், விண்ணில் வளருமா வேர்கள், இறையன்பு.வெ., ப. 68

99. ஏழாவது அறிவு I ,இறையன்பு.வெ., ப. 71

100. அவ்வுலகம், இறையன்பு.வெ., ப. 55

101. நெஞ்சைத் தொட்டதும் சுட்டதும், இறையன்பு.வெ., ப. 56

102. பணிப்பண்பாடு, இறையன்பு.வெ., ப. 1

103. மேலது, ப. 5

104. சின்னச்சின்ன மின்னல்கள், இறையன்பு.வெ., ப. 76

105. மேலது, ப. 160

106. வாய்க்கால் மீன்கள், இறையன்பு.வெ., ப. 4

107. சின்னச்சின்ன மின்னல்கள், இறையன்பு.வெ., ப. 200

108. சுற்றுச்சூழல் , கருணாநிதி. நா., ப. 1

109. ஆத்தங்கரை ஓரம், இறையன்பு.வெ., ப. 66

110. ஓடும் நதியின் ஓசை I ,இறையன்பு.வெ., ப. 75

111. சுற்றுச்சூழல் இயல், தர்மராஜ்.ஜே. , ப. 28

112. மேலது, ப. 53

113. ஆத்தங்கரை ஓரம், இறையன்பு.வெ., ப. 65

114. மேலது, ப. 11

115. மேலது, ப. 23

116. வாய்க்கால் மீன்கள், இறையன்பு.வெ., ப. 78